விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 09 வியாழக்கிழமை (25.08.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 249

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## ஒஸ்லோவில் நேரடிப் பேச்சு

# விடுதலைப்புலிகளின் யோசனை அரசாங்கத்தினால் நிராகரிப்பு!

## நோர்வேயூடாக அறிவிப்பு

(கொழும்பு)

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்துவது குறித்து அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்களை ஒஸ்லோவில் நடத்துவது குறித்த விடுதலைப் புலிகளின் யோசனையை அரசு நிராகரித்துள்ளது.

யுத்தநிறுத்தம் தொடர்பாக உள்நாட்டில் பேச்சுநடத்தாமல் வெளிநாட்டில் நடத்த வேண்டும் என்பதற்கு, தகுந்த விளங்கங்களை விடுதலைப் புலிகள் முன்வைக்காத வரையில் அவர்களின் கோரிக்கையை பரிசீலிக்கப் போவதில்லையென அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக நோர்வேயூடாக விடுதலைப் புலிகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது. (12 ஆம்பக்கம் பார்க்க)

## ரணில் ஜனாதிபதியானாலும்

# சமாதான நடவடிக்கைகளில் சந்திரிகாவுக்கு உரிய அந்தஸ்து

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னரும் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு சமாதான நடவடிக்கையினை முன்னெடுத்துச் செல்வதற்கான உரிய அந்தஸ்தை கௌரவமான முறையில் நாம் வழங்கவுள்ளோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போது அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் ஹவாட் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வெளியிட்ட சிலகருத்துக்கள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் 6 வருடகால சேவையினையையும், அவர் நாட்டுக்குச் செய்த சேவையினையும் நாங்கள் மதிக்கின்றோம்.

ஜனாதிபதி சந்திரிகா சமாதான நடவடிக்கையில் முக்கிய பங்கினை ஆற்றியுள்ளார். அவரை உடனடியாக அரசியலிலிருந்து ஓய்வெடுக்க முடியாதநிலையை நாம் ஏற்படுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## ஹக்ரூப் ஹொக்லண்ட் - ஞானம் வவுனியாவில் நேற்றுச் சந்திப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானத்திற்கும், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்டிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று மாலை வவுனியா மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

வவுனியாவில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் தாக்கப்பட்டமை, குறிப்பிட்ட பிரதேசத்தினுள் ஏனைய ஆயுதக் குழுக்களின் நடமாட்டம் மற்றும் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடிக்கு ஒரு கிலோ மீற்றர் தொலைவில் புதிய சோதனைச் சாவடி அமைக்கப்பட்டிருப்பது போன்ற விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகளினால் கண்காணிப்புக் குழுவினருக்கு விளக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் குழுவினர் ஊடான இச்சந்திப்பில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் ஞானம், மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் அலை, நிர்வாகசேவைப் பொறுப்பாளர் மலரவன் உட்பட்ட குழுவினரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சார்பில் அதன் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட், அதன் வவுனியா மாவட்டத் தலைவர் மற்றும் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (ச-8)

## நான்கு பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரலாகினர்

(கொழும்பு)

பிரிகேடியர் தரத்தைக் கொண்ட நான்கு இராணுவ உயரதிகாரிகள் மேஜர் ஜெனரல் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

சரத் கருணாரட்ண, பராக்கிரம பன்னிப்பிட்டிய பி.சந்திரவன்ச மற்றும் திஸ்ஸ ஹேவர்த்தன ஆகியோரே தற்போது மேஜர் ஜெனர (12 ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளருக்கு பிணை விடுதலை

(கொழும்பு)

ஜே.வி.பியினரால் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை படமெடுத்த போது தாக்குதலுக்குள்ளாகி பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சுடரொளி நாளிதழின் செய்தியாளர் யதுர்சன் பிரேமச்சந்திரன் நேற்று கோட்டை நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஒக்டோபர் முதல் மின்கட்டண உயர்வு

(கொழும்பு)

மின்சாரக் கட்டண உயர்வு குறித்த வர்த்தமானி அறிவித்தல் ஒன்றினை இலங்கை மின்சார சபை வெளியிட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் படி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி முதல் இக்கட்டண உயர்வு அமுலுக்கு வரும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினருக்கு எதிராக நேற்று மணற்காட்டில் மீனவர்கள் போராட்டம்

(மருதங்கேணி)

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இரண்டு மீனவர்களை விடுவிக்கக்கோரி மணற்காட்டு மீனவர்கள் நேற்று மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் கடற்தொழிலுக்குச் சென்ற அதே இடத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அன்ரன் சத்தியரூபன் (வயது 32), மைக்கேல்பிள்ளை வின்ரனிதாஸ் (வயது 22) ஆகிய இருவரும் காணாமல்போயிருந்தனர்.

இதனையடுத்து அப்பகுதி மீனவர்கள் தமது படகுகளில் அவர்க (12 ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடியில் நேற்று ஹர்த்தால்

(காத்தான்குடி)

மட்டக்களப்பு காத்தான்குடிப் பிரதேசத்தில் நேற்றுக் கதவடைப்பு நடாத்தப்பட்டது. இதனால் அப்பிரதேசத்தின் வழமைநிலை பாதிக்கப்பட்டிருந்தது.

கடந்த சனிக்கிழமை இரவு அப்பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் மூன்றுபேர் காயமடைந்த சம்பவம் தொடர்பாக தமிழ்த் தினசரிகளில் வெளியான செய்திகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முஸ்லிம் இளைஞர்கள் என்ற பெயரில் இக் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இப்பிரதேசத்தில் உள்ள ஆயுதக் குழுவொன்றே சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கலாமெனத் தெரிவித்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் எழுச்சி கையெழுத்து மனுக்கள் தேர்தல் ஆணையாளரிடம் கையளிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டு நடத்தவேண்டுமென வலியுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் எழுச்சிக் கையெழுத்துக்கள் அடங்கிய மனுக்கள் நேற்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிடம் கையளிக்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியவின் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து அந்த ஆவணங்களைத் கையளித்தனர்.

மக்கள் சக்தி மனு எனப் பெயரிடப்பட்ட இச் செயற்திட்டம் 2 பிரிவுகளான மேற்கொள்ளப்பட்டன. இதன்படி நாட்டின் பிரதான நகரங்களில் மக்களின் கையெழுத்துக்களைப் பெறுவதற்காக பிரசார வாகனங்களைப் பயன்படுத்தியும் வீட்டுக்குவீடு வேலைத் திட்டத்தின்கீழ் வீடு வீடாகச் சென்று கையெழுத்துக்களும் சேகரிக்கப்பட்டன. (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயா
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கதிர்காமர் கொலை தொடர்பில் முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளில் பல முக்கியமான தகவல்கள் வெளியாகி இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலையாளிகள் பல தடவைகள் அமைச்சரின் வீட்டிற்குச் சென்று தகவல்களைச் சேகரித்துள்ளார்கள்.

அந்த வீட்டில் வேலை செய்த நபரின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என விசாரணை நடத்தும் குழுவினர் அறிவித்துள்ளனர். கதிர்காமர் நீச்சல் தடாகத்தில் எவ்வளவு நேரத்தைச் செலவிட்டார்? அதற்குப் பின்னர் எவ்வாறு நடந்துகொண்டார்? என்பதை பல மாதங்கள் கொலையாளிகள் கண்காணித்துள்ளார்கள் என அந்தக் குழுவினர் கூறியிருக்கிறார்கள்.

மலையகப் பிரதேசங்களில் இருக்கும் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களது உதவியும் பெறப்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சரைக் கொலை செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட சினைப்பர் இயந்திரம் சம்பவத்துடன் தொடர்புடைய கொலையாளி மாத்திரமே உபயோகிக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் நம்புகின்றார்கள்.

சினைப்பர் பிரயோகத்திற்குப் பின்னர் படைத்தரப்பு துரித நடவடிக்கைகளை எடுத்திருந்தால் அவற்றிற்குப் பதிலளிக்கும் வகையில் கைக்குண்டுகளைப் பயன்படுத்தி பாரிய சேதத்தை ஏற்படுத்த கொலையாளிகள் திட்டமிட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக 71பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 48பேர் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். 5 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோர் மேலும் விசாரிக்கப்பட்டு வருகிறார்கள் என இராணுவப் பேச்சாளர் பிறிகேடியர் தயா ரத்னாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# சுனாமி உதவிபற்றிய தகவல்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களினால் வழங்கப்பட்ட உதவிகள் குறித்த தகவல்கள் பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும்.

இவ்வாறு வடமராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளரும் மனித உரிமைகளை மேம்படுத்தலும் பாதுகாத்தலுக்குமான மாவட்ட சமூக பாதுகாப்புக் குழுவின் தலைவருமான எம்.ஸ்ரீபதி மனித நேய அமைப்புக்களின் சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னரான செயற்திட்டத்தின் கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது, சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் உதவிகள் குறித்த தகவல்கள் இரகசியக் காப்பு ஆவணங்களாக இருக்கக்கூடாது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எந்த நிறுவனம், என்ன வகைப்பட்ட பொருட்களை எப்போது, எங்கே வழங்கின என்ற விபரங்கள் பொதுவான நிலையில் ஆவணப்படுத்தப்படவேண்டியது அவசியமாகும்.

அத்துடன் பெறப்படுகின்ற தகவல்கள் உண்மைத்தன்மை கொண்டவையாகவும் இருக்க வேண்டும். மேலும் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் பற்றிய விபரங்கள் ஏனையோருக்கும் தெரியப்படுத்தப்படவேண்டும்.

இல்லையேல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யார், யார் என்ன வகைப்பட்ட உதவிகளை வழங்கியுள்ளனர் என்ற நிலை தெரியாமல் போய்விடும் ஏன்று குறிப்பிட்டார்.(து-16)

# பால்மாவின் விலையை குறைக்க இணக்கம்

(கொழும்பு)

பால்மா உற்பத்தியாளர்களும் விநியோகத்தர்களும் பால்மாவின் வீலையைக் குறைப்பதற்கு இணங்கியிருக்கிறார்கள்.

அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தலைமையில் கடந்த திங்கட்கிழமை அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போது இது தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கிறது.

அதன் பிரகாரம் 400கிராம் எடையுடைய பொதி ஒன்றின் விலையை 10முதல் 13ரூபாவுக்கு இடைப்பட்ட தொகையால் குறைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உருவாகியுள்ளன. அரசாங்கம் வற்வரியை நீக்கியதால் கிடைக்கும் அனுகூலங்களை நுகர்வோருக்கு பெற்றுக்கொடுக்க இணங்கியிருக்கும். பால்மா உற்பத்தியாளர்கள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் குறைந்த விலையில் பால்மாவை விநியோகிக்கத் தீர்மானித்துள்ளனர்.

வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் நோக்கில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளால் நுகர்வோர் பயன்பெற முடியாமல் போனதால் இதனை விசாரிப்பதற்கு பிரதமர் முடிவுசெய்திருந்தார்.

அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் கடந்த திங்கட்கிழமை இச் சந்திப்பு இடம்பெற்றது. (அ-2)

# ஜனாதிபதியின் தன்னிச்சை நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது என்கிறார் ரணில்

(கொரழும்பு)

சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் ஜனாதிபதித்தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஐக்கியதேசியக்கட்சி உறுதியாக உள்ளதாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹற்றன் பேருந்து நிலையத்திடலில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்பொழுது அவர் இவ்வாறு கூறினார்.

"ஜனாதிபதித்தேர்தலை நிறுத்தும் அல்லது பிற்போடும் முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டு மக்கள் வாக்களிக்கும் உரிமையைப் பறிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

ஜனாதிபதி தமது 2ஆவது காலப்பகுதியை ஆரம்பித்து 99 ஆம் ஆண்டு எனக் கூறுவது மக்களின் உரிமையைப் பறிக்கும் செயலாகும். ஜனாதிபதியின் இந்த தன்னிச்சையான நடவடிக்கைகளை ஐக்கியதேசியக்கட்சி அனுமதிக்கப்போவதில்லை.

இந்த நாட்டு மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். இந்தப் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு நிர்வாகத்திறமையுள்ள அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது.

தமது அதிகாரத்தை தங்க வைத்துக்கொள்வதற்காக இன்றைய ஆட்சியாளர் பல்வேறு சூழ்ச்சிகளைச் செய்து மக்களைத் திசை திருப்பும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்" என்று எதிர்க்கட்சித்தலை வர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (து-2)

# இராசிபலன்

25.08.2005
(ஆவணி 9, வியாழக்கிழமை)
சஷ்டி பிற்பகல் 2.19 மணிவரை
பரணி பின்னிரவு 2.33 மணிவரை
இராகுகாலம் 01.35 - 3.05 மணிவரை
சுபநேரம் 07.35 - 9.05 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தெய்வசிந்தை, நண்பர்கள் சந்திப்பு, புதிய தகவல், காரியசித்தி. |
| இடபம் | பிரயாணம், சுபசெலவு, முயற்சி தாமதம், சயன சுகக்குறைவு. |
| மிதுனம் | கீர்த்தி, போசன சுகம், உடல் நலம், முயற்சி கைகூடும். |
| கடகம் | அதிகாரம், சுப நிகழ்வு, நல்ல முயற்சி, போசன நன்மை. |
| சிங்கம் | கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, காரிய தாமதம், தந்தை வழிஉறவு. |
| கன்னி | தர்மம், வீண்பிரச்சினை, காரிய தாமதம், அமைதிக்குறைவு. |
| துலாம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, முயற்சி கைகூடும், போசன சுகம், புதிய தகவல். |
| விருச்சிகம் | பெரியோர் சந்திப்பு, தொழில் நன்மை, காரிய சித்தி, போசன சுகம். |
| தனுசு | புத்திரரால் கவலை, காரிய இடையூறு, பூர்வ புண்ணியம், தனவிரயம். |
| மகரம் | சுப செலவு, மனக்கிலேசம், புதிய தகவல், காரிய தாமதம். |
| கும்பம் | உறவினர் உதவி, அதிகபிரயாசை, முயற்சி கைகூடும், கீர்த்தி. |
| மீனம் | அதிக செலவு, குடும்பக்கவலை, காரிய தாமதம், போசன சுகக்குறைவு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# பாலியல் நோய்க்குப் பலியாகும் மாணவர்கள் ஆய்வுகள் கூறுவதாக வைத்திய அதிகாரிகள் கவலை

(கொழும்பு)

இரத்தினபுரி வைத்தியசாலையில் பாலியல் நோய் சிகிச்சை முகாமுக்கு சிகிச்சைபெற வருகின்றவர்களில் சுமார் 5 வீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் பாடசாலை மாணவர்களை அறிவுறுத்துவதற்கான திட்டம் ஒன்றின் அவசியத்தை அந்த வைத்தியசாலையின் பாலியல் நோய் சிகிச்சைப் பிரிவுக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி வலியுறுத்தியுள்ளார்.

இரத்தினபுரியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற செயலமர்வு ஒன்றின் போது அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இதுவரை இரத்தினபுரி மாவட்டத்தில் எச்.ஐ.வி. வைரஸால் பீடிக்கப்பட்ட 5 பேர் பரிசோதனைகள் மூலம் இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சிறுவர்களில் 20வீதமானவர்கள் ஏதாவது ஒரு வகையிலான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்படுகின்றார்கள் என்று ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாக இந்த செயலாமர்வின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (து-2)

## தென்மராட்சியில்

# சட்டவிரோத மின்னிணைப்பு பெறுவோர் தொகை அதிகரிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள மட்டுவில் சந்திரபுரம் ஆகிய கிராமங்களுக்கு நாலரை வருடங்களுக்குப் பின்னர் இரு தினங்களுக்கு முன் மின்சார விநியோகம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சட்டவிரோத மின் இணைப்புக்களைப் பெறுபவர்களின் தொகை அதிகரித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதன் காரணமாக மின் விநியோகத்தில் அடிக்கடி தடங்கல்கள் ஏற்பட்டு வருகின்றன என்றும் அறியப்படுகின்றது.

இது இவ்விதமிருக்க, மின் இணைப்புக்களைப் பெறுவதற்கு மின்சாரக்கட்டணப் பாக்கிகளையும், வைப்புப் பணத்தையும் வங்கியில் செலுத்திய நிலையில் இருக்கின்ற பலருக்கு இன்னமும் இலங்கை மின்சாரசபையினால் மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

ஆயினும், மின் இணைப்புக்களை வழங்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்பட்டு வருவதாகவும் மின் இணைப்புகளுக்காகப் பொருத்துவதற்குரிய வயர் இல்லை எனக் கூறப்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவித்திருக்கிறார்கள். இருப்பினும், மின் இணைப்புக்களை வழங்கும் பணியினை ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்தகாரர்கள் தம்மிஷ்டம்போல வழங்கிவருகின்றமை குறித்து பொதுமக்கள் மத்தியில் பெரும் விசனம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (து-16)

# ஒன்றுகூடல் நிகழ்வு

(தென்மராட்சி)

சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி காலை 10.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தின் தலைவர் சீ. வி.கந்தையா சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரம் பிரதம விருந்தினராகவும் வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் குமாரசாமி சண்முகநாதன் சிறப்பு விருந்தினராகவும் பங்குகொள்கின்றனர்.

இந்நிலையத்தின் சிறுவர்களுக்கு உதவும் திட்டத்தில் பயன்பெறும் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளதாக நிலையத்தின் செயலாளர் த.பாலதயானந்தன் தெரிவித்துள்ளார். (து-16)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் பரிசுத்தினம் விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.45 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமெரிக்க முதியோர் மருத்துவசபை நிபுணர்த்துவ உறுப்பினர் தி.சிறிஜெயராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில், திருமதி சீதா ஜெயராஜா பரிசில்களை வழங்கவுள்ளார். (அ-9)

# நல்லை ஆலயச் சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டப அரங்கில் நடைபெறும் "கந்தபுராணம்" தொடர் இசைச் சொற்பொழிவில் இன்று மாலை 6.00 மணிக்கு கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீசிவ வை.நித்தியானந்த சர்மா "அசுரர் தோற்றம்" என்ற பொருளில் இசைச் சொற்பொழிவாற்றவுள்ளார். (அ-9)

# மறவன்புலோ, தனங்கிளப்பு பகுதி கட்டாக்காலி கால்நடைகள்

## தண்ணீரைத் தேடி அலையும் பரிதாபம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் நீண்டகாலமாக மழை பெய்யாத காரணத்தினால் பல பிரதேசங்களில் இருக்கக்கூடிய விவசாயக் குளங்கள், ஏரிகள் மற்றும் வயல்களில் காணப்படும் விவசாயக் கிணறுகளில் நர்நிலை பெருமளவு வற்றிய நிலையில் காணப்படுகின்றது.

இதன் காரணமாக இப்பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகள் பெருங்கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.அத்துடன் இவற்றை நம்பியிருக்கின்ற இப்பகுதிக் கால்நடைகள் நீர் இல்லாமையினால் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அறியப்படுகின்றது.

இதேசமயம் தென்மராட்சிப்பிரதேசத்திலுள்ள மறவன்புலோ, தனங்கிளப்பு பகுதிகளில் இருக்கக்கூடிய குளங்கள் மற்றும் ஏரிகளிலும் நீர் நிலை வற்றிய நிலையில் இருப்பதால் அங்கு கட்டாக்காலிகளாகத் திரியும் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாடுகள், ஆடுகள தண்ணீருக்குப் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியிருப்பதாகவும் தெரியவருகின்றது. (து-16)

# தமிழ் ஊடகவியலாளர் மீது தொடரும் அரசியல் நெருக்கடிகள்

(கொழும்ப)

தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும் தமிழ் ஊடக நிறுவனங்கள் மீதும் தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம்பெறுவதை இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவித்துள்ளது.

அத்துடன் இவ்வாறான நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத துவதற்கு ஆக்க பூர்வமான நட வடிக கைகளை மேற்கொள்ளு மாறும் ஒன்றியம் அரசாங்கத்திடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பு கோடடையில்இடம்பெற்ற ஜே.வி.பியின ஆர்ப்பாட்டம் தொடர்பான செய்தி களை சேகரிப்பதற்காக சென்ற சுடர் ஒளிட் பத்திரிகையின செய்தியாளரான யதூசன பிரேமச்சந்திரன் ஜே.வி.பி. உறுப்பினர்களால் மிகவும் மோசமாகதாக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப் படைக்கப்பட்டதாகவும்,

தற்போது அவசரகாலச்சட்டத்தின் கீழ் குற்றபபுலனாய்வு பிரிவினரால் விசா ரணைக்குட்படுத்தப்படுவதாகவும் தமிழ் ஊடகவியலாளர்ஒன்றியத்தின் அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவருக்கு புலிகளுடன் தொடர்பு இருப்பதாக பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளதா கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களை ஒன்றியம் வன்மையாக மறுப்பதுடன் தமிழ் ஊடகவியாளர்களை ஜே. வி.பி. உறுப்பினர்கள் விடுதலைப்புலிகள் அமைப்போடு தொடர்பு படுத்துவதையும், அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதையும் பலவந்தமாக பிடித்துச்சென்று பொலிஸாரிடம கையளிப்பதையும் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவித்துள ளது.

தற்போது அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும் கூட ஊடகவியலாளர்கள் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகளை வைத்திருப்பது சட்ட விரோதமானது அல்லது என்பதை தாம் சுட்டிக் காட்ட விரும்புவதாகவும், விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ள ஒரு அமைப்பு அல்ல எனவும் தெரிவித்துள்ள தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அரசாங்கமே விடுதலைப் புலிகளுடன்பேச்சுக்கள் நடத்தவுள் ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் புலிகளுடன் தொடர்பு என்ற குற்றச்சாட்டைப் பயன் படுதததி பேரினவாதிகள் தமிழ் ஊடகத்துறையை நசுக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவே தாம் சந்தேகிக்க வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியினர் முன்னரும் பல சந்தர்ப்பங்களில் செய்தி சேகரிக்கச் சென்ற தமிழ் ஊடகவியலாளர்களைத் தாக்கியிருக்கின்றனர்.


பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சியாக இருந்து கொண்டு இராணுவததைப்போலவும் பொலிஸாரைப் போலவும ஜே.வி.பி செயற்படுகின்ற முறைமையானது ஜனநாயக அரசியல் பண்பல்ல என்பதையும் சுட்டிக் காட்டிய இலங்கைத்தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் இவ்வாறான செயற்பாடுகளை அரசாங்கம் தொடர்ந்தும் அனுமதிப்பது தமிழ் ஊடகவியலாளர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துளளது. என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, வீரகேசரிப் பத்திரிகையின் குருநாகல் பிராந்திய செயதியாளர் எஸ். ரமேஷ் கடந்த வெள்ளிககிழமை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் கைது செய்யப்பட்ட மைக்காக பொலிஸார் கூறியிருக்கின்ற காரணம் ஏற்புடையதல்ல.

அதனால் இந்த இருவரையும் உடனடியாக விடுதலை செய்வதறகு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அரசாங்கத்தை ஒன்றியம் வலியுறுத்தியுள்ளதுடன் அவசர கால சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் ஊடகவியலாளர்களைக் கைது செய்ய வேண்டாம எனவும் பகிரங்கமாகக்கேட்டு கொள்வதாகவும் தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஜனநாயக விழுமியங்களையும் ஊடக சுதந்திரத்தையும் தொழிற்சுதந்திரத்தையும் மதித்து செயற்பட வேண்டும் என்பதையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் சுட்டிக்காட்ட விரும்புவதாகத் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதேவேளை,நேற்று முன்தினம் செய்திகளைச் சேகரிக்கச் சென்ற பலதமிழ் ஊடகவியலாளர்கள் பயமுறுத்தப் பட்டுள்ளதுடன் பலர் தமதுகடமைகளைச் செய்யாது தடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)



கரவெட்டி ரலன்ற் பாலர் கல்விச் சோலையில் விளையாட்டு விழாவின்போது ஓய்வு பெற்ற அதிபர் வே. குமாரசாமி மங்கள விளக்கையேற்றி ஆரம்பித்து வைப்பதையும் விழாத்தலைவர் ஆசிரியர் ஐ.செல்வராஜா இயக்குநர் சு. இராமச்சந்திரன் ஆகியோர் அருகில் நிற்பதையும் காணலாம்.



ரலன்ற் முன்பள்ளி விளையாட்டு விழாவின் போது பிரதம விருநதினராக வருகைதந்த பிரதேச சபை செயலாளர் வே. குலநாயகததுக்கு முன்பள்ளி சிறாரான சி. நிரோசன் மலர் மாலை அணிவிப்பதையும் நிலைய ஆசிரியை திருமதி கி. குமுதினயும் வடமராட்சி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் வி. அருளானநதம் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.



கரவெட்டி ரலன்ற் பாலர் கல்விச் சோலையின் விளையாட்டு விழாவின் போது இடைவேளை நிகழ்ச்சியாக முன்பள்ளி சிறார்கள் விநோத உடையுடன் காணப்படும் காட்சி.

(படங்கள் :- எஸ்.இராமச்சந்திரன்)

## சாவ. இந்துக் கல்லூரி நூற்றாண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி நூற்றாண்டு பெருவிழா நாளை மாலை 4.30 மணிக்கு கல்லூரியின் சுப்பிரமணியம் திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேசும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய கல்விப்பணிப்பாளர் றெஜினா இருதயநாதன், தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்றீநிவாசன், பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் ஆகியோரும் கலந்துகொள்ளவுளளனர்.

நூறறாண்டு சிறப்பு மலரும் வெளியிடப்படவுள்ளது. இம் மலரின் முதல பிரதியை சாவுகச்சேரி இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் பூ.வெற்றிவேலு பெறவுள்ளார். மற்றும் சிறப்புப் பிரதிகளை சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னை நாள் அதிபர் க.மகேஸ்வரன், அதிபர் சி.குகதாஸன, அதிபர் க.சந்திரசேகரா, அதபர் இ.கைலைநாதன், பிரதிஅதிபர் ம.கெங்காதரன், பிரதி அதிபர் நா.திலகநாதன், பிரதிஅதிபர் செ.சபாரத்தினம், பாடசாலை நிறுவுனர் குடும்ப அங்கத்தவர் சா.தாமோதரன், பழையமாணவன் இ.துரைரரசா ஆகியோர் பெறவுள்ளார்கள்.இந்நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர அ. சண்முகதாஸ் நிகழ்த்தவுள்ளார். நன்றி யுரையினை நூற்றாண்டுவிழா சபைச் செயலர்யோ.ஜெயக்குமார் வழங்கவுளளார். (அ-19)

# ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பான ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 28ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோர் தொடர்பான மூன்று மனுக்கள் யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இநத விசாரணையின்போது அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமி விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட நீதிவான் இந்த மனுக்கள் மீதான விசாரணைகளை ஒத்திவைத்தார். யாழ். மாவட்ட நீதிவான் விக்னராஜா முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படட போது இராணுவ சட்டத்தரணி கப்டன் கருணாதிலக்க நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

# பாதுகாப்புப் படையினர் கண்டனம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலைக்கான பொறுப்பை ஐக்கியதேசியக்கடசியும்அதன்ஆதரவு பெற்ற ஊடகங்களும் தங்கள்மீது சுமத்துப் குற்றச்சாட்டுக்களை இட்டு பாதுகாப்புப் படையினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் உரிய முறையில்மேற்கொள்ளப்படா ததாலேயே அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படு கொலை செய்யப்பட்டார் என்ற வகையில்ஐக்கியதேசியக்கட்சியும் அதன்ஊடகநிறு வனங்களும பிரயோசன மற்ற ஒரு முயற்சியை மேற்கொண்டு வருகின்றன.

இத்தகைய புத்தி சாதுரிய மற்ற நடவடிக்கையின் பலனை விடுதலைப் புலிகளே பெற்றுக்கொள்வார்கள் என்றும அறிவிக்கப்பட்டுள்ளது.(து-2)

# நீதிமன்றங்களில் பொலிஸ் -இராணுவம் இணைந்து காவல்

குடாநாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து நீதிமன்றங்களுக்கும் பொலிஸாருடன் மேலதிகமாக இராணுவமும் காவல் கடமைக்கு அமர்ததப்பட்டுள்ளனர். குறிப்பாக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் இதுவரை காலமும் பொலிஸார் மட்டுமே காவல் கடமையில் நிறுத்தப்பட்டிருந்தனர்.


சென்ற வாரம் முதல் இராணுவத்தையும் காவல் கடமைக்கு அமர்த் தப பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

கடந்த 4ஆம் திகதி இணுவில் பகுதியில் பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜயவர்த்தன கொலை செய்யப்பட்டதை அடுத்து பொலிஸாருக்கு பாதுகாப்பு வழங்கும் நிமித்தம் இராணுவம் அமர்த்தப்பட்டிருக்கலாம் என ஊகங்கள் தெரிவிககப்படுகின்றன.

இதேவேளை, தமிழ் பத்திரிகை ஒன்றை விற்பனை செய்யும் ஊழியர்களுக்கு பெருமளவு பொலிஸாரும் இராணுவமும் ஆயுதங்களுடன் பாதுகாப்பில் ஈடுபடுவதையும் குடாநாட்டில் பல பாகங்களிலும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.(து-101)

# வியாபாரப் போட்டி கலவரத்தில் முடிந்தது



(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இரவு சுன்னாகத்தில் இரு வியாபாரநிலையங்களுக்கிடையே ஏற்பட்ட முறுகல் நிலை கைகலப்பில் முடிவடைந்தது.

சுன்னாகச் சந்திக்கு அருகாமையில் உள்ள தாஸ் மற்றும் வாணிவியாபார நிலையங்களுக்கிடையில் ஏற்பட்ட முறுகல் நிலையானது உச் சமடைந்ததனால் நேற்று முன்தினம் இரவு ஒரு மணிக்கு தாஸ் ஹொட்டல் அடித்து நொருக்கப்பட்டுள்ளதோடு ஒரு காரும் ,ஒரு ஆட்டேவும் சேதப்படுத்தப்பட்டுள்ளது. சேதமாககபபட்ட கார் மற்றும் ஆட்டோ சுன்னாக பொலிஸநிலையத்தில் விடப்புட்டுள்ளது. இவ் இரு வியாபார நிலையங்களும் நேற்றுமூடப்பட்டிருந்தன. (து-19)

## இன்று ஒரு தகவல்

# முயற்சி தேவை

ஊருக்கு வெளியில் அமைதியான ஒரு இடம். அங்கே ஒரு ஆசிரமம். அதில் ஒரு சாமியார் இருந்தார். அவர் தினமும் நல்ல போதனைகள் எல்லாம் செய்வார். பலபேர் அங்கு போய் சில நாட்கள் தங்கியிருந்து விட்டு அவர் கூறும் அறிவுரைகளைக் கேட்டுக் கொண்டு வருவது வழக்கம். ஒருமுறை அவரைப் பார்த்து விட்டுப் போவதற்காக மூன்று வெளியூர் தம்பதிகள் வந்தார்களாம். அந்த மடத்திலேயே சாப்பிட்டுக்கொண்டு... தங்கியிருந்து அவருடைய போதனைகளைக் கேட்டுக்கொண்டு போக வேண்டும் என்பது அவர்களின் நோக்கம்.

காலையிலேயே குளித்துவிட்டு பூஜையில் உட்கார்ந்தார் அந்த சுவாமி. இவர்களும் குளித்துவிட்டு அந்தப் பூஜையைப் பார்ப்பதற்காக அவர் முன்பு வந்து உட்கார்ந்தார்கள். பூஜை ஆரம்பமானது. சம்பிரதாயப்படி அது நீண்டநேரம் நடந்து கொண்டிருந்தது. இவர்களுக்கு நல்ல பசி. இருந்தாலும் இந்த நேரத்தில் அதை எப்படி வெளியே காட்டிக்கொள்வது? பேசாமல் இருந்தார்கள்.

அந்த சுவாமி பூஜையை முடித்தார். அதன் பின்பு பேச ஆரம்பித்தார். பேச்சு அருமையாகத்தான் இருந்தது. அமிர்தமாகத்தான் இருந்தது. இருந்தாலும் இவர்களுக்கிருந்த வயிற்றுப்பசி அதைச் சரியாகக் கவனிக்கவிடவில்லை. அந்த சுவாமியே இதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. இவர்களுக்கு மனதில் ஒரு எண்ணம் "உள்ளே சாப்பாடு தாயராகிக் கொண்டிருக்கும் போலிருகிறது.இந்தப் பேச்சு முடிந்ததும் நம்மை உள்ளே அழைத்துக்கொண்டு போவார்" என்று ஒரு நினைப்பு.

ஆனால் சுவாமி இதைப்பற்றி எதுவும் பேசவில்லை. கண்டுகொள்ளவும் இல்லை. ஒரு பெண்மணியால் அதற்கு மேல் சும்மா இருக்க முடியவில்லை. "சாப்பாட்டைக் கவனிக்கலாமா?" என்று மெதுவாக ஆரம்பித்தார். 'ஓ... கவனிக்கலாமே' என்று உள்ளே அழைத்துக்கொண்டு போனார் சுவாமி. இவர்கள் மிகவும் அவசரமாக எழுந்திருந்து உள்ளே ஓடினார்கள். அங்கே ஒரு மேசை மீது ஒரு கிண்ணம் மூடியிருந்தது. "ஓ... இதுதான் சாப்பாட்டு மேசை போலிருக்கிறது... இங்கே சாப்பாடு வந்துவிடும்" என்று நினைத்தார்கள். உடனே போய் சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள்.

சுவாமி அந்தக் கிண்ணத்தை எடுத்து அந்தப் பெண்ணிடம் கொடுத்தார். அவர் உடனே அதை வாங்கி மூடியைத் திறந்து பார்த்தார். உள்ளே ஒரு சாவி இருந்தது. "ஓ... சரிதான்... இது சமையல் அறைச் சாவி போலிருக்கிறது... அங்கே போய் அதைத் திறந்து... சாப்பாட்டை நாமே எடுத்துக்கொண்டு வந்து இங்கே வைத்துச் சாப்பிட வேண்டும் போலிருக்கிறது" என்று நினைத்தார்கள். "சாவி இருக்கிறது அல்லவா? வாருங்கள் பூட்டிய அறையைக் காட்டுகிறேன்" என்று சுவாமி அவர்களை அழைத்துக்கொண்டு போய்க் காட்டினார்.

இவர்கள் அந்த அறையை மிகவும் ஆவலோடு திறந்தார்கள். உள்ளே பார்த்தால் அங்கே... அரிசி... பருப்பு.... விதவிதமான காய்கறி எல்லாம் இருந்தது. சமையலுக்கு வேண்டிய மிளகாய், எண்ணெய், பால், தயிர்,நெய் என எல்லாம் இருக்கிறது. அடுப்பு விறகு, நெருப்புப்பெட்டி கூட அங்கே இருந்தது. சாப்பாடு தயாராக இருக்கும் என்று நினைத்துக் கொண்டு போன இவர்கள், இதையெல்லாம் பார்த்ததும் சோர்ந்து போய்விட்டார்கள்.

"சுவாமி! என்ன இது சாப்பாடு இல்லையா?" என்றார்கள். "அதுதான் சாப்பாட்டுக்கு வேண்டிய எல்லாம் இங்கு இருக்கிறதே. அடுப்பு மூட்டி நீங்கள் தான் அவரவர் ருசிக்கு ஏற்றமாதிரி சமைக்க வேண்டும். இந்த சந்நியாசிக்கு எப்படி சமைக்கத் தெரியும்?" என்று கேட்டார் சுவாமி. "சாப்பாடு தயாராக இருக்கும் என்று நாம் எதிர்பார்த்தோம்" என்றனர். "நீங்கள் இப்படிச் சொல்லுவீர்கள் என்று நானும் எதிர்பார்த்தேன். இதுவரைக்கும் நான் எவ்வளவோ தத்துவம் எல்லாம் எடுத்துச் சொன்னேன். எல்லாவற்றையும் விட இதுதான் அனுபவபூர்வமான தத்துவம்.

ஆண்டவன் நமக்கு நல்ல மனதைக் கொடுத்திருக்கிறான். நல்ல வாய்ப்புக்களையும் கொடுத்திருக்கிறான். அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய மூளையையும்,சிந்தனையையும் கொடுத்திருக்கிறான். ஆனாலும் அடுப்பை நீங்கள் தான் மூட்டவேண்டும். உங்களுக்கு உகந்ததை நீங்கள் தான் சமைத்து ருசித்து அனுபவிக்க வேண்டும். ஆண்டவன் அதைச் செய்யமாட்டான்" என்றாராம் அந்த சுவாமி.

"நம்முடைய வாழ்க்கையில் நல்ல பலன்களைப் பெற நாம் தான் முயற்சிக்க வேண்டும். அதற்குரிய சூழ்நிலையைத் தான் ஆண்டவன் கொடுப்பான். அதை விளக்குவதற்காகத்தான் அந்த சுவாமி அப்படிச் செய்து காட்டினார்" என்று விளக்கம் கொடுத்தார் ஒரு பெரியவர். அதன் பின்பு அந்த மூன்று தம்பதிகளும் தெளிவடைந்து [illegible]ார்களாம்.

இந்தக் கதையை எனது நண்பன் ஒருவனிடம் சொன்னேன். அவன் மிகவும் சந்தோஷப்பட்டான். "நீங்கள் சொல்வது சரி சார். ஆனாலும் நான் அதை விட ஒரு படி மேலே சார்.... எனக்கெல்லாம் அரிசி, பருப்பு இருக்கும் அறை எது என்று கையைக் காட்டி விட்டால் போதும்... கிண்ணத்திலிருந்து சாவியை எடுத்துக் கொடுக்க வேண்டிய அவசியம் கூட இல்லை சார்" என்றான்.

"அப்படியென்றால் எப்படி அறையைத் திறப்பாய்?" என்று கேட்டேன். "பூட்டை உடைத்துத் திறந்துவிடுவேன் சார்... அது தான் எனக்குப பழக்கம்" என்கிறான்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# சுனாமியால் பாதிக்கப்படாத பிரதேச மக்களும் சுனாமி நிவாரணம் பெறுவதாகப் புகார்

(தென்மராட்சி)

வடமராட்சி வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் ஏற்பட்ட சுனாமிப் பேரலை அனர்த்தங்களைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் சுனாமி உதவித் திட்டத்தில் இதுவரையும் 200க்கு மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் பணிபுரிந்து வருவதாகத தெரியவருகின்றது.

இருப்பினும் கூட சுனாமிப் பேரலை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் இன்னமும் போதியளவு உதவித் திட்டங்களோ அல்லது வாழ்வாதாரங்களுக்கான திட்டங்களோ பூரணத்துவம் மிக்கதாக அமுல்படுத்தப்படவில்லை என அறியப்படுகின்றது.

இதேசமயம்,சுனாமியினால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவும் திட்டங்கள் எனக்கூறிக்கொண்டு, பல வெளிநாடுகளில் இருந்து தென்னிலங்கைக்கு வருகை தரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களின் உண்மையான தேவைகளை மதிப்பீடு செய்யாமல் உதவிப் பொருட்களை தம்மிஷ்டம் போல வழங்கிச் செல்கின்றன.

இத்தகைய நிறுவனங்களின் நிலைப்பாடுகளினால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களும், தளத்தில் கடந்த எட்டு மாதங்களாக பணிகளை ஆற்றி வருகின்ற நிறுவனங்களும் அமைப்புக்களும் பல நடைமுறை சார்ந்த பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றன எனவும் அறியப்படுகின்றன.

இதேசமயம் சுனாமிப் பேரலையின் காரணமாக உண்மையாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட உதவிப்பொருட்கள் குறித்த தகவல்களைத் திரட்டுவதற்கு யாழ்.மாவட்டத்தை மையமாகக் கொண்ட சில நிறுவனங்கள் முயன்று வந்துள்ள போதிலும் கூட,அவற்றைப் பெறமுடியாத நிலையே காணப்படுகின்றது.

இதேநேரத்தில் சுனாமிப் பேரலை அனர்த்தங்கள் சிறிதளவேனும் இடம்பெறாத வலிகாமம், தென்மராட்சி பிரதேசங்களில் இருக்கின்ற சில குடும்பங்கள், தாமும் சுனாமியினால் பாதிக்கப்பட்டதாகக் கூறி சில நிறுவனங்களிடமிருந்து உதவிப் பொருட்களைப் பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (து-16)

# ஹபரணை- திருமலை வீதியில் கொள்ளை இராணுவ உடை அணிந்தோர் கைவரிசை

(திருகோணமலை)

ஹபரணைப் பகுதியில்,வாகனங்களில் சென்றோரிடமிருந்து 1இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

மூன்று வாகனங்களில் சென்றவர்களிடமிருந்து நேற்று முன்தினம் இரவு11.30 மணியளவில் இந்தப் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக ஹபரணைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கொள்ளையிடப்பட்ட பணத்தில் 1இலட்சம் ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர் தாள்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ உடை அணிந்த சிலரால் ஹபரணை- திருகோணமலை வீதியில் சென்று கொண்டிருந்த கார்கள் இரண்டும் லொறி ஒன்றுமே கொள்ளையிடப்பட்டுள்ளது. பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அப்பகுதிக்கு பொலிஸார் அனுப்பப்பட்ட போது கொள்ளைக்காரர்கள் அங்கிருந்து தப்பியோடிவிட்டதாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-7)

# முதல் பயணம் இந்தியாவுக்கு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று இந்தியா செல்லவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் அனுரா பண்டாரநாயக்கவுக்கு முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இது அமையவுள்ளது.

இவர் தனது விஜயத்தின் போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை உடன்பட நாட்டின் தற்போதைய நிலவரம் குறித்தும் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

இப் பயணத்தின் போது இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், வெளிநாட்டு அமைச்சர் நட்வர்சிங் மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியாகாநதி ஆகியோரை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (ந-4)

# விசாரணை செய்யச் சென்ற பொலீஸார் மீது தாக்குதல்

(கொழும்பு)

பேராதனை ஹெட்டம்ப பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பாக விசாரணை செய்யச் சென்ற பொலிஸாரை இனம்தெரியாத ஒரு குழுவினர் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை ஹெட்டம்ப சுற்று வட்டத்துக்கு மேலாக வாகனம் ஒன்று சென்றதால் விபத்து ஏற்பட்டதாகவும் இது தொடர்பாக விசாரணை செய்யச் சென்றபோது இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாகவும் பேராதனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனத்தில் இருந்தவர்கள் பிரபுக்கள் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துவிட்டுச் செல்ல முற்படுகையில் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலின் போது காயமடைந்த மூன்று பொலிஸார் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பேராதனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# யுத்த நிறுத்த உடன்படிக்கையை வலுவடையச் செய்வது அவசியம்

(கொழும்பு)

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் உள்ள சில சரத்துக்களை மேலும் வலுவடையச் செய்வது அவசியமென இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையினைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு பல பிரேரணைகளைச் செயற்படுத்த வேண்டியதன் அவசியம் காணப்படுவதாக கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொாக்லண்ட் தெரிவித்துள்ளார்.

எனினும், இவ்விடயங்கள் குறித்து யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள இரு தரப்பினரே தீர்மானிக்க வேண்டும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் நடாத்த உத்தேசித்துள்ள உயர்மட்டப் பேச்சுவார்த்தை தொடர்பாக ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (அ-4)

# தொழிலாளர் பிரச்சினைகளை தீர்க்கப் புதிய திட்டம்

(கொழும்பு)

தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் புதிய செயற்திட்டம் ஒன்றை அறிமுகம் செய்வது குறித்து தொழில் அமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது.

இது தொடர்பாகப் புதிய் சட்டங்கள் கொண்டுவரப்படுமென தொழிலமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் நீதிமன்றங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் வழக்கு விசாரணைகள் தாமதமடைவதைத் தவிர்ப்பதற்கும் புதிய திட்டமொன்றைக் கொண்டு வரவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில், தொழிலாளர் நீதிமன்றங்களுக்குப் புறம்பாக பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முறையை அமைச்சர் அறிமுகம் செய்யத் திட்டமிட்டு வருகின்றார்.

இது தொடர்பாக நீதியமைச்சுடன் வெகுவிரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் அதாவுட செனவிரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (து-2)

# 50 ஆயிரம் இலங்கையருக்கு ஜோர்தானில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

ஜோர்தானில் 50 ஆயிரம் இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொழில் உறவுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான்,இந்தியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா ஆகிய நாடுகளுடன் இலங்கைக்கும் இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி,நபர் ஒருவருக்கு ஆகக்குறைந்த சம்பளமாக 30 ஆயிரம் ரூபா கிடைக்கக் கூடியதாக வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி இந்தோனேஷியாவில் நடைபெறும் மாநாட்டில் இதற்கான உடன்படிக்கைகள் கைச்சாத்தாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-7)

# துப்பாக்கி முனையில் சம்பளப் பணம் கொள்ளை

(கொழும்பு)

மொறட்டுவ ரயில் நிலைய ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்காகக் கொண்டு செல்லப்பட்ட பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

7 இலட்சத்து 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொகையே இவ்வாறு கொள்ளையிடப்பட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டாளர் நிஹால் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

சம்பளப் பணத்தை ரயிலில் எடுத்துச் சென்ற சம்பந்தப்பட்ட அதிகாரி அதனை ரயில் நிலையத்தில் ஒப்படைக்கும் பொருட்டு ரயிலில் இருந்து இறங்க முற்படுகையில் துப்பாக்கியுடன் வந்த இரண்டு பேர் பணத்தைக் கொள்ளையிட்டு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# அவசரகாலச் சட்டத்துக்கான அங்கீகாரம் பேரினவாத ஆளும் வர்க்க நிலைப்பாடே

## புதிய ஜனநாயக கட்சி அறிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தி அதனைப் பாராளுமன்ற அங்கீகாரத்துடன் நீடித்துள்ள செயலானது பல்வேறு உள்நோக்கங்களை அரசாங்கம் முன்னெடுக்கப்போவதையே சுட்டிக்காட்டுகிறது.

இதனால் கடந்த மூனறரை வருடகால புரிந்துணர்வு - யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கும் சமாதான முன்னெடுப்புச் சூழலுக்கும் அபாய நிலை தோன்றியுள்ளது.

அத்துடன் குறிப்பாக வடக்கு-கிழக்கு மலையக மக்களினதும் நாடடின் தொழிலாளர் விவசாயிகளினதும அடிப்படை ஜனநாயக மனித உரிமைகள் மறுக்கப்படவும், மற்ப்படவும் இவ் அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படும் அச்சநிலை உருவாகியுள்ளது.

ஆதலால் பொலிஸ மற்றும் ஆயுதப்படைகளுக்கு அதிகாரம் வழங்கி நிற்கும் அவசரகாலச் சட்ட அமுல்படுத்தலை எமது புதிய-ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன் அதனை வாபஸ் பெறவேண்டும் எனவும் வற்புறுத்துகின்றது.

இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் மத்திய குழு சார்பாக வெியிட்டுள்ள அறிக்கையில் அதன பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த 12ஆம் திகதி இடம் பெற்ற வெளிவிவகார அமைச்சரின் படுகொலையைச் சாட்டாக வைத்தே இவ் அவசரகாலச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அது பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடன் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டும் உள்ளது. இதில் அரசாங்கத் தரப்புக் கட்சிகளும் எதிர்த்தரப்பு ஐக்கிய தேசியக் கடசி, ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய கட்சிகளும் ஒற்றுமையாக வாக்களித்து தமது பேரினவாத ஆளும் வர்க்க நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன.

இவ் அவசரகாலச் சட்ட அமுலாக்கத்தால் தமது கைகளுக்கு கிடைத்துள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி பொலிஸ் மற்றும் ஆயுதப்படையினர் சாதாரண சட்டங்களுக்கு அப்பாலான அத்துமீறல்களை நிச்சயம் முன்னெடுக்கவே செய்வார்கள். தேடுதல், சுற்றிவளைப்பு, சோதனை, கைது, தடுத்து வைத்தல், சித்திரவதை, பொய்க குற்றச்சாட்டுதல் போன்றன கடந்த காலங்களைப் போன்று இடம் பெறவே செய்யும். அதன்மூலம் மூன றரை வருடகால சமாதான சூழல் மக்களின் இயல்பு வாழ்க்கை சீர் குலைந்து அச்சமும் பயப்பீதியும் கொண்ட இருண்ட நிலை தோன்றும் அபாயம் உருவாகியுள்ளது.

அத்துடன் தொழிலாளர்கள், வவசாயிகள மற்றும் அரசாங்க, தனியார் துறை ஊழியர்கள் தத்தமது கோரிக்கைகளுக்காக முன்னெடுக்கும் ஜனநாயக- தொழிற்சங்கப் போராட்டங்களும ஏனைய எதிர்ப்புகளும் இதே அவசரகாலச் சட்டத்தின் மூலம் தடுத்து முறியடிக்கப்படும் நிலையையும் அரசாங்கம் தோற்றுவித்துள்ளது.

எனவே, வடக்கு- கிழக்கு மலையக மக்களுக்கும், தொழிலாளர்கள், விவசாயிகள், அரசாங்க, தனியார் துறை ஊழியர்கள் மற்றும் அனைத்து மக்களுக்கும் படுபாதகமாக அமுலபடுத்தப்படவுள்ள அவசரகாலச்சட்டத்தை வாபஸ் வாங்குமாறு புதிய ஜனநாயக கட்சி வற்புறுத்துகின்றது.

அதேவேளை பழிவாங்கும் தோரணையில் நாளாந்தம் இடம்பெற்று வரும் படுகொலைகளை சகல தரபபினரும் நிறுத்திக் கொள்வதற்கும் யுத்த நிறுத்த மீறல்களை செய்யாதிருப்பதற்கும் அரசாங்கமும் விடுதலைப புலிகள் இயக்கமும தாமதமின்றி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு உரிய இணக்கபபாட்டிறகு வருவதையும் எமது கட்சி வலியுறுத்துகின்றது. (அ)

# மன்னாரில் இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகள்

அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் மன்னாரில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை உப்புக்குளம், எழுத்தூர், எமில்நகர் சின்னக்கடை போன்ற இடங்களில் இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று அடையாள அட்டைகளைப் பரிசோதனை செய்து வீடுகளில் வசிப்பவர்களின எண்ணிக்கையையும் கணக்கெடுத்துள்ளனர்.

இதேவேளை, மன்னார், மதவாச்சி வீதியில் பெருந்தொகையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வீதிச் சோதனை நடவடிக்கைகளில ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான அரிப்பு, சிலாவத்தை போன்ற இடங்களில் இரவு வேளைகளில் இராணுவத்தினர் சென்று ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால் அங்குள்ள மக்கள் தமது வீடுகளில் தங்குவதற்கு அச்சம் கொண்டுள்ளனர். (து)

# முன்பள்ளிக்குப் புதிய கட்டடம்

(பருத்தித்துறை)

கியூமெடிக்கா நிறுவனத்தின் நிதியுதவியைக் கொண்டு சுனாமி அனர்த்தப் பணிமனையின் ஆதரவுடன் 21 இலட்சம் ரூபா செலவில் மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்பள்ளிகுப் புதிய கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இம் முன்பள்ளிக் கட்டடத்திற்கான அடிக்கல்நாட்டு விழா சன சமூக நிலையத் தலைவர் சட்டத்தரணி என்.தங்கராசா தலைமையில் நடைபெற்றபோது யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவநேசன் அடிக்கல்லை நாட்டினார்.

இந்நிகழ்வில் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை.சத்தியசீலன், சுனாமி அனர்த்தப் பணிமனை முன்பள்ளித் திட்டப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உடல்களில் பல உபாதையாம்!
தற்கால பிள்ளை கட்கும்
பேரறியாப் பல நோய்கள்
உண்டாவதேன் இவ்வுலகில?

பரிகசித்த பாட்டனார்
அவ்வழியால் போன தன்
பேரனை அழைத்தார்
புத்திமதிகள் சொல்வதற்கோ!
சட்டெனத் திரும்பி அவன்
'போ பழசு' என்று விட்டுப்
போகின்றானாம் பாருங்களேன்....!

ஜெகசுபதா.

# பரபரப்புக்கு மத்தியில் ஆரம்பமாகும் ஆசி - இங்கிலாந்து 4 ஆவது டெஸ்ட்

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் கிரிக்கொட் போட்டி இங்கலாந்தின் நொட்டிங்காமில் இனறு ஆரம்பமாகின்றது.

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து டெஸ்ட் போட்டி கொண்ட ஆஷஸ் தொடரில் இதுவரை 3 ஆட்டங்கள் நடந்து முடிந்துள்ளன. இதன் முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இரணடாவது டெஸ்ட் பலத்த பரபரப்புக்கு இடையே இரண்டு ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றிவாகை சூடியது.

அதனைத் தொடர்நது நடந்த மூன்றர்வது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

1-1 என்ற சமன் நிலையில் நான்காவது டெஸட் போட்டி இன்று ஆரம்பமாகின்றது. சாதாரணமாக தொடங்கிய இத்தொடர் தற்போது பரபரப்பின் உச்சத்தை அடைந்து உலகளவில் ரசிகர்களிடையே எதிர்பார்ப்பைத தூண்டியுள்ளது.

அவுஸ்திரேலிய அணியினர் கனவிலும் நினைத்துப் பார்த்திருக்காத அளவிறகு இங்கிலாந்து அணியினர் நெருக்கடியைக கொடுத்தார்கள். இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வரிசை துரிதமாக வளர்ச்சி பெறறுள்ளது. குறிப்பாக இளம் வீரரான கெவின பற்றர்சனினது துடுப்பாட்டம் மிகவும் சிறப்பாகவுள்ளது.

அதேபோல் பிளின்ரொப் அவுஸ்திரேலியா அணக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்து வருகிறார். இவர் துடுப்பாட்டத்தில் கோட்டை விட்டால் பந்து வீச்சின் போது விக்கெற்றுக்களை வாரிச் சுருட்டுகிறார். இவர்களை விட ஏனைய வீரர்களும் அவ்வப்போது இங்கிலாந்து அணிக்கு கைகொடுத்து வருகின்றனர்.



இதேவேளை அவுஸ்திரேலிய அணியினர் இந்தத் தொடரில் ஆட்டம் கண்டுள்ளார்கள். துடுப்பாட்ட வீரர்கள் நிலையாக நின்று துடுப்பெடுத்தாடாமையும், பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சும் பெரிதாக எடுபடாமையுமே இதற்குக் காரணம். (அ-19)

# கங்குலி தலைவராகியமையால் அணியில் புதிதாக மாற்றமில்லை

வீரர்கள் அனைவரும் அவரவர் கடமையைச் சரியாகச் செய்தால் அணியின் வெற்றி வாய்ப்புக்களை பிரகாசப்படுத்தமுடியும் என இந்திய கிரிக்கெட் அணியன் பயிற்சியாளா கிரேக் செப்பல் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சிம்பாவேக்கு செல்வதறகு முன்பாக இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் செப்பல் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போதே பின்வருமாறு தெரிவித்தா. மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்

சர்வதேச கிரிக்கெட் தரவரிசையில் இந்திய அணி ஏழாவது இடத்தில் இருக்கின்றது. தரவரிசை ஒருபோதும் பொய் சொலலாது. நமது உண்மை நிலையைத் தான் பிரதபலிக்கின்றது. இந்த நிலையை திடீரென மாற்றிவிடமுடியாது.




எனவே இதற்கு அணியில் உள்ள வீரர்கள் ஒவ்வொருவரும் தத்தமது வேலையை ஒழுஙகாக செயதால் உலகத் தரவரிசையில் இந்திய அணி முன்னிலைக்குச் செல்லும் எனத் தெரிவித்தார்.

மேலும் இந்தத் தொடரில் நாம் சந்திக்க உள்ள எதிரணிகளான நியூசிலாந்து, சிம்பாவே அணியை சாதாரணமாக கருதிக்கொள்ள முடியாது.

ஏனெனில், சிம்பாவே மண்ணில் இந்திய அணி இதற்கு முன்னர் சரியாக விளையாடியதில்லை. இதை மனதில் வைத்து அதற்கேற்ற வகையில் வியூகம் வகுப்போம் எனவும அணித்தலைவராக சவுரவ் கங்குலி மீண்டும் தெரிவுசெய்யப்பட்டிருப்பதால் அணியில் புதிதாக எந்த மாற்றமும் இல்லை எனவும் செப்பல் தெரிவித்தார். (அ-19)

## விளையாட்டு செய்திகள்

# எனது ஆட்டம் விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் என்கிறார் கங்குலி



மேலும் மேலும் ஓட்டங்களை குவித்துக்கொண்டே இருப்பதுதான் தன்து ஆசை என்கிறார் இந்திய கிரிக்கெட் அணித் தலைவா சவுரப் கங்குலி.

இந்திய கிரிக்கெட் அணிக்கு மீண்டும் அணித்தலைவராக தெரிவுசெய்யப்பட்ட சவுரப கங்குலி சிம்பாவேக்கு புறப்பட முன்பு விமான நிலையத்தில் வைத்து அளித்த பேட்டியிலே இவ்வாறு கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அணியின் தலைவராக மீண்டும நான் தெரிவு செய்யப்பட்டிருப்பது மகிழ்சசிக்குரிய விடயம் எனவும் அதேசமயம் அணியின் வெற்றிக்காக நன்றாக விளையாடுவதே முக்கியம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை என் மீதான விமர்சனங்களுக்கு நான் பதிலளிக்க விரும்பவில்லை. இதற்கு எனது ஆட்டம் பதிலளிக்கும் எனவும் தெரிவித்தார். (அ-19)

# இந்திய கிரிக்கெட் வீரர்களின் பொறுப்பற்ற செயற்பாடு

## கிரி.சபை செயலாளர் கடும் கோபம்



இந்திய கிரிக்கெட் வீரர்களின் நடவடிக்கை எதுவும் சரியில்லை எனவும் இது தொடர்பாக கடும் நடவடிக்கை எடுப்பது பற்றி பரிசீலித்து வருவதாகவும் இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் எஸ்.கே.நாயர் நேற்றுமுன் தினம் தெரிவித்தார்.

சிம்பாவேக்கு இந்திய வீரர்கள் விமானத்தில் புறப்பட எல்லா ஏற்பாடுகளும் மும்பையில் செய்யப்பட்டிருந்தன. ஆனால் அணித்தலைவர் கங்குலி நேர காலத்துடன் வராமல் நள்ளிரவு விமானம் புறப்படுவதற்கு சில நிமிடங்கள் முன்னதாகத்தான் வந்து சேர்ந்தார்.

இதேபோன்று முகமது கைப், ஹர்பஜன் சிங ஆகியோரும் கால தாமதமாகவே விடுதிக்கு வந்திருந்தார்கள். இச் செயறபாடுகள் தான் எஸ்.கே.நாயருடைய கோபத்திற்கு முக்கிய காரணமாக அமைந்தது. (அ-19)


# புயலில் சிக்கிய விமானம் விழுந்து நொறுங்கியது

## 80 பேர் பலி; 20க்கும் மேற்பட்டோர் படுகாயம்

பெரு நாட்டின் 'டான்ஸ் ஏர்லைன்ஸ்' நிறுவனத்துக்கு சொந்தமான போயிங்-737 விமானம் பயணிகளை ஏற்றிக்கொண்டு லிமா நகரில் இருந்து புறப்பட்டது. அந்த விமானத்தில் 100க்கும் மேற்பட்ட பயணிகளும் சிப்பந்திகளும் இருந்தனர்.

புகாஷ்பா நகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த அந்த விமானம் அமோசான் காட்டுப் பகுதியை நெருங்கியபோது திடீர் என்று புயல்காற்று வீசியது. மேக மூட்டமாகவும் இருந்தது. சுழன்று அடித்த காற்றில் சிக்கிய விமானம் தாறுமாறாக பறந்தது. அதனால அந்த விமானம் கட்டுப்பாட்டை இழந்தது. விமானத்தை அவசரமாக புகாலபா நகர விமான தளத்தில் தரை இறக்க விமானி முயன்றார்.

ஆனால் அதற்கு முன்னதாகவே விமானம் காட்டுப் பகுதியை ஒட்டியுள்ள பகுதியில் விழுந்து நொறுங்கியது. ரோடு ஓரத்தில்



அந்த விமானம் நொறுங்கிக் கிடந்தது.

இதில் விமானத்தில் இருந்தவர்களில் 80 பேர் பலியாகிவிட்டனர். 20க்கும் மேற்பட்ட பயணிகள காயமடைந்து உயிருக்கு போராடிக்கொண்டு இருந்தனர். அந்தப் பகுதியில உள்ள கிராமவாசிகளும், மீட்புப் படையினரும் விரைந்து சென்று உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்களை மீட்டனர். (து)

# யூதர் குடியிருப்புகளை அகற்ற இளைஞர்கள் எதிர்ப்பு இஸ்ரேல் இராணுவம் மீது எறிகுண்டுகள் வீச்சு

மேற்குக்கரையில் இருந்த யூதர்களை அகற்ற இஸ்ரேல் இராணுவம் முறபட்ட போது அவர்களை நோக்கி யூத இளைஞர்கள் தீப்பந்துகளையும், கை எறிகுண்டுகளையும வீசியதால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

பாலஸ்தீனப் பகுதியில் இஸ்ரேல் அக்கிரமிப்புக்குள்ளான காசா பகுதியில் இருந்து யூதர் குடியிருப்புகள் முற்றிலும் அகற்றப்பட்டதையடுத்து அடுத்த கட்டமாக மேற்குக்கரையில் இருந்து ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி நேற்று முன்தினம் தொடங்கியது.

இஸ்ரேல் இராணுவ வீரர்கள் 10 ஆயிரம் பேர் யூதர்களை வெளியேற்றும் பணியில் ஈடுபடடனர்.

கிட்டத்தட்ட 2ஆயிரம் தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் மேற்குக்கரையில் உள்ளனர்.

அவர்களை இராணுவ வீரர்கள் வெளியேற்ற முறபட்டனர். தீவிரவாத இளைஞர்கள் வெளியேற மறுத்தனர். இதனால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

ஹோமேஷ் மற்றும் சனுர் ஆகிய இடங்களிலிருந்த குடியிருப்புகளை இராணுவ புல்டோசர்கள் இடித்துத் தள்ளின. தீவிரவாதிகள் தீப்பந்துகளையும் கை எறிகுண்டுகளையும் வீசினர்.

கலவரத் தடுப்புப் பொலிஸார் தடிகளையும் கேடயங்களையும் கையில் ஏந்தியபடி சானுர் நோக்கி முன்னேறினர்.

சானுர் கேட்டில் முகமூடி அணிந்த இளைஞர்கள வேலிகளுக்கு தீ வைத்தனர். மேற்குககரையில் இருந்து ஆக்கிரமிப்புகளை அகற்றுவதுதான் கடுமையானதாகவும் ஆபத்தானதாகவும இருக்கும் என்று இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது.

கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பகுதிகளை இஸ்ரேல் கைப்பற்றி அங்கு யூதர்களை குடியமர்த்தியது.

பாலஸ்தீனத்துடன் சமரச உடன்பாடு ஏற்படுவதற்கு வசதியாக ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இருந்து வெளியேற இஸ்ரேல் முன்வந்தது. (து)

## WORLD NEWS உலக தரிசனம்

# பங்களாதேஷுக்கு முஜாகித்தீன் தீவிரவாதிகள் மிரட்டல்

(டாக்கா)

பங்களர்தேஷில் இஸ்லாமிய ஆட்சியை அறிவிக்காவிட்டால், மீண்டும் பயங்கரத் தாக்குதல் நடத்துவோம் என்று தடை செய்யப்பட்ட 'ஜமாத் உல் முஜாகிதீன்' தீவிரவாத அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது.

பங்களாதேஷ் முழுவதும் கடந்த புதன் கிழமை வெடிகுண்டுகள் வெடித்துச் சிதறின. மொத்தம் உள்ள 66 மாவட்டங்களில் 65 மாவட்டங்களில் நாட்டு வெடிகுண்டுகள் வெடித்ததில், இரண்டு பேர் பலியானார்கள். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனா. இந்தப் பயங்கரத்துக்கு 'ஜமாத் உல் முஜாகிதீன்' தீவிரவாத அமைப்பே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடாபாக பலர் கைது செய்யப்பட்டனா.


தலைநகர் டாக்கா உட்பட நாட்டின் முக்கிய இடங்களில் தீவிர பாதுகாப்பு போடப் பட்டது.

இந்நிலையில், பங்களாதேஷில் இஸ்லாமிய ஆட்சியை அறிவிக்க வேண்டும். இல்லா விட்டால் நாட்டில் மீண்டும் பயங்கரத்தாக்குதல் நடத்துவோம் என்று முஜாகிதீன் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

ஏற்கனவே இரண்டு முறை இதுபோல் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்தனர். இது மூன்றாவது முறை.

மேலும், 'ஜமாதுல் முஜாகிதீன்களைக் கைது செய்ய முயற்சி செய்தாலும் நேரடித் தாக்குதலில்இறங்குவோம். உடனடியாக இஸ்லாமிய சட்டத்தை அறிவிக்க வேண்டும என்றும் எச்சரித்துள்ளனர். (து)


சுவிட்சர்லாந்தில் பலத்த மழை பெய்து வருகிறது. பெர்ன் நகரம் முழுவதுமே வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.



# வீரப்பன் வாழ்வும் வதமும்

## மீள் பார்வை

என். சொக்கன் ①



## I. கூட்டுப் புழுத் திட்டம்

18 அக்டோபர் 2004 தர்மபுரிக்கு அருகே ஒரு சிறிய புறவழிச் சாலையில், அந்தக் காவலர் குழு மிகுந்த ஆர்வத்தோடும் பட படப்போடும் காத்திருந்தது.

நேரம் இரவு பத்து மணியைக் கடந்திருக்க, அந்தச் சாலையெங்கும் அடர்த்தியான இருள் படர்ந்திருந்தது. அதனூடே கூர்ந்து கவனித்தபடி அவர்கள் காத்திருந்தார்கள். அவர்கள் எதிர்பார்க்கும் அந்த வாகன்ம் இன்று வருமா, வராதா?

பல மாதங்களாக கவனத்துடன் திட்டமிடப்பட்ட சம்பவம் அது. கொஞ்சமும் பிசிறில்லாமல் சிந்தித்து, ஒவ்வொரு வசனத்தையும், ஒவ்வொரு காட்சியையும் முன்கூட்டியே கணித்து கச்சிதமாக நிறைவேற்றியிருந்தார்கள். தூக்கமற்ற இரவுகளும் பதற்றம் கூடிய பகல் பொழுதுகளுமாக எத்தனையோ வருடங்கள் கழிந்துவிட்டன. இன்று ஒரு விடை கிடைத்தாக வேண்டும்.

கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளாக மூன்று மாநில காக்கிச் சட்டைகளின் கண்களில் விரலை விட்டு ஆட்டிக்கொண்டிருந்த அந்தப் பச்சைச் சட்டையை அன்று துவைத்துக் காயப் போட்டு விடுகிற முடிவோடு அவர்கள் அங்கே காத்திருந்தார்கள்.

ஆனால் வீரப்பன் இன்று வருவானா? அல்லது கடைசிநேரத்தில் தன்னைச் சூழ்ந்திருக்கும் சதிவலையைப் புரிந்து கொண்டு சுதாரித்துவிடுவானா?

அவர்களால் எதையும் நிச்சயமாகத் தீர்மானிக்க முடியவில்லை. ஆகவே அவன் தப்பிவிட வாய்ப்பின்றி ஒரு வலுவான வலையைப் பின்னி விட்டு அவனாக வந்து விழுவதற்காகக் காத் திருந்தார்கள்.

அந்த நீண்ட சாலையின் குறுக்கே, நான்கு இடங்களில் அவர்களின் குழுக்கள் மறைந்திருந்தன. அவன் அந்தச் சாலைக்குள் நுழைந்துவிட்டாலே போதும். அந்தப் பொறிகளில் ஏதாவது ஒன்றில் சிக்கியாகவேண்டும்.

ஒவ்வொரு இடத்திலும் சாலையின் குறுக்கே ஒரு பெரிய லொறி நிறுத்தப்பட்டிருந்தது. அதில் போதுமான அளவு மணல் மூட்டைகளை அடுக்கிவைத்திருந்தார்கள். ஏதோ ரிப்பேருக்காக வண்டியை நிறுத்தியிருப்பதுபோல் ஒரு தோற்றம்.

வீரப்பன் வரப்போகும் வாகனம் எவ்வளவு வேகமாக வந்தாலும் அந்த லொறி அருகே வேகத்தைக் குறைத்தாக வேண்டும். அப்போது அவனைச் சுற்றிவளைத்துவிடலாம் என்பது திட்டம்.

உண்மையில், வீரப்பன் வந்து கொண்டிருக்கும் அந்த 'அம்புலன்ஸ்' சிறப்புக் காவல் படையின் வாகனம் தான். அதை ஓட்டிவருவதும் சரவணன் என்ற காவலர்தான். என்றாலும், இந்தத் திட்டம் சரியாக நிறைவேற வேண்டுமே என்ற கவலை அந்தக் காவல் படையைக் கவ்வியிருந்தது. இதற்கு முன் எத்தனையோ அதிரடிப்படைகளும் சிறப் புக்குழுக்களும் வீரப்பனைப் பிடிப்பதற்குப் பலவிதமான திட்டங்களைத் தீட்டியிருந்தார்கள். சொல்லிவைத் தாற்போல், ஒவ்வொரு முறையும் பொலிஸின் கண்களில் மண்ணைத் தூவித் தப்பித்துவிடுகிற மாயக் காரனாக இருக்கிறான் அவன்.

தமிழக சிறப்பு அதிரடிப்படையின் தலைவர் விஜய்குமார் கையில் துப்பாக்கியுடன் காட்டைச் சுற்றிவருவதால் மட்டும் வீரப்பனைப் பிடித்துவிட முடியாது என்று உறுதியாக நம்பினார். ஆகவே அவனுடைய பாணியிலேயே அவனைப் பிடிக்கும் பணியைச் செய்து முடிக்கத் தீமானித்தார்.

முதல்வேலையாக, 'அதிரடிப்படையை இரண்டு பிரிவுகளாகப் பிரித்தார் அவர். ஒன்று, தேடும் குழு. மற்றது பதுங்கும் குழு.

இவற்றில், 'தேடும் குழு' என்பது எப்போதும் போல், காட்டுக்குள் நுழைந்து, வீரப்பனின் குழு எங்கே இருக்கிறது, எப்படி இயங்குகிறது என்பன போன்ற தட்யங்களை அலசிக் கொண்டிருக்கும்.

கடத்தல்காரனாக, கொலையாளியாக போலீசாரால் தேடப்பட்ட ஒரு குற்றவாளி வீரப்பன். திடீரென்று காவிரிக்காகக் குரல் கொடுத்து, கர்நாடகத் தமிழர்களின் நலனுக்காக அறிக்கை விடுத்து ஓர் அவசர அரசியல் முகம் பெற முயற்சி செய்தவன்.

- சிறப்பு அதிரடிப் படையினரால் அவன் குழுவினரோடு கொல்லப் பட்டதுடன் வீரப்பன் கதை முடிந்துவிடக்கூடும். ஆனால் வீரப்பனை மையமாகக் கொண்டு பின்னப்பட்ட அரசியல் வலைகளின் சிடுக்குகளைக் களையப்போவது யார்?
- வீரப்பனை ஒரு தமிழினத் தலைவராக முன்னிறுத்த முயற்சி மேற்கொண்டவர்கள் விசாரிக்கப்படுவார்களா?
- அவனால் பயனடைந்தவர்கள் யார் யார் என்கிற விவரம் வெளி வருமா?
- வீரப்பனின் ஒவ்வொரு கடத்தல் நாடகத்தின்போதும் பல கோடிகள் கைமாறியதாக பலமான வதந்திகள் எழுந்தன. ரஜினிகாந்த் உள்பட பல பெரும் புள்ளிகளின் பெயர்கள் அடிபட்டன. அவை பற்றிய விசாரணைகள் இனி என்ன ஆகும்?
- ஒவ்வொரு கடத்தலின்போதும் வீரப்பனுக்குத் தரப்பட்டதாகக் கூறப்படும் கோடிக்கணக்கான பணத்தை இனி ஆளப்போவது யார்? அதை மீட்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது?
- அரசுத் தூதுவராகவே வீரப்பனைச் சந்தித்துத் திரும்பும் அளவு இதுவிஷயத்தில் சகலமும் அறிந்தவராக இருந்த நக்கீரன் கோபால் திடீரென்று வீரப்பன் விவகாரத்திலிருந்து விலகியதன் பின்னணி என்ன?
- வீரப்பனோடு தொடர்புடைய தமிழ்த் தீவிர்வாத இயக்கங்களைக் களையெடுப்பது சுலபமா?

இன்னும் தீராத கேள்விகள் இருக்கின்றன. இந்நூல் எந்தச் சார்பும் எடுக்காமல் வீரப்பன் விவகாரத்தை நடுநிலையுடன் அலசி ஆராய்கிறது. ஒரு சாதாரண கடத்தல்காரனாக இருந்து, கைப்பற்ற முடியாத அரசியல் செல்வாக்குடன் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஒரு கிரிமினல் கோலோச்ச முடிந்தது எப்படி என்கிற பரபரப்பு மிகுந்த கதையையும் ஆதாரபூர்வமாகச் சொல்லுகிறது.

கிழக்கு

மற்றொரு (புதிய) குழுவான 'பதுங்கும் குழு', நாளைய பாய்ச்சலுக்கான முன் ஆயத் தங்களாக, ரகசியமான சில நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இந்தக் குழுவிலிருந்த எல்லோரும், 'போலீஸ் வெட்டு' மறந்து, நிறைய தலைமுடி வளர்த்துக்கொண்டு, கிராமத்து மக்கள் போல் நடை, உடை, பாவனைகளை மாற்றிக்கொண்டு, வீரப்பனின் காட்டு எல்லையில் இருந்த கிராமங்களிலும் மலைப்பகுதிகளிலும் குடியேறினார்கள்.

விவசாயக் கூலிகளாக, வியாபாரிகளாக, இஸ்திரிபோடுபவர்களாக, படகோட்டிகளாக, பேருந்து நடத்துனர்களாக, கட்டடத்தொழிலாளர்களாக, பிச்சையெடுப்பவர்களாக இப்படிப்பல விதமான வேஷங்களில் அந்தக் கிராமங்களில் புதிதாகக் குடியேறியவர்களாக உருமாறினார்கள் அந்தக் காவலர்கள்.

"மாறுவேஷம்" என்றால் வெறுமனே ஒன்றிரண்டு நாட்களுக்கு அல்ல. மாதக்கணக்காக, அந்தக் கிராமங்களிலேயே தங்கி, அந்த மக்களுடன் கலந்து பழகி, உள்ளூர் காரர்களின் முழு நம்பிக்கையைப் பெற்றார்கள் அவர்கள்.

அந்தக்காட்டுக்குள் வீரப்பன் தைரியமாக உலா வருகிறான் என்றால், அதற்கு முக்கியமான காரணம், எல்லையோரக் கிராமங்களில் அவனுக்கு இருந்த 'ஹீரோ' மரியாதையும், நண்பர்களும் தான். அவர்களுடைய உதவியால்த்தான், காட்டுக்குள் சக்தி மசாலா போட்டு சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு, பி.பி.சி. தமிழோசை கேட்டுக்கொண்டு வாழ்கிறான் அவன்.

ஆகவேதான், போலீஸின் கண்ணில் படாத வீரப்பனை, அவனுடைய நம்பிக்கையைப் பெற்ற இந்தக் கிராமத்தவர்கள் சுலபமாகப் பார்க்கமுடிகிறது. அவனுக்குத் தேவையானவற்றைக் கொண்டு செல்ல முடிகிறது. வெளியே ஊர், உலகத்தில் என்ன நடக்கிறது என்றெல்லாம் தகவல் தெரிவிக்க முடிகிறது.

(தொடரும்)

# நல்லூரரான் திருவடிக்கு இன்று பதினாறாம் திருவிழா



## உன் அருள் வேண்டும்

நல்லை உறைவாய் மிளிர் சேர் கந்தா
எயிலை அட்டஇறைவர் இடத்தாய்
அழகுமலர் இரு மாதர் புடை சூழ்ந்த கந்தா
உன் அருள் வேண்டும்
உன் கழலடியையே தஞ்சமெனப் புகுந்தோம்
எம் தீரா வினைகளறுப்பாய்
மன்றாடியே உன்னை மன்றாடியே
வேண்டுகின்றேன் உன் அருள் வேண்டும்ஐயா
தரணியில் உன் நாமம் ஒலிக்க
கந்தா உன் அருள் வேண்டும்-என்றும்
உன் வரம் வேண்டும்

*மைதிலி சிவகிருபராஜா*

## வேல் கொண்ட குமரா போற்றி

வேலெடுத்து பகை முடித்த
வெற்றி வேலா போற்றி
வண்ண மயிலேறி
சூரன் தனை வென்ற
அழகனே போற்றி
நல்லை நகர் மீதினிலே
ஆட்சிபுரியும் உமைமைந்தனே போற்றி
அழகென்று பெயர் எடுத்த
வள்ளி மணாளா போற்றி
தந்தைக்கு உபதேசித்த
நற்றவா போற்றி
நானிலத்து நாயகனே
தமிழீழ திருமகனே
உன்கழல் நாடி வந்தோம்
என்றும் தமிழனை காத்திட
திருவுள்ளம் கொண்டவனே
போற்றி போற்றி போற்றி

*கே.ரி.விந்தன்*

## துயர் தீர்க்க மயிலில் வருக!

கைத்தலம் கசிப்பொடு கத்தியும் இடுப்பினில்
கப்பிய கணவனைக் கடிதேகி
நித்தமும் நிறை வெறி நீ மிக குடிப்பதால்
நிற்கதியான தென் குடி யென்று
உத்தமன் முருகனை உத்தமி பணிந்திட
உடன் அருள் பாலிக்க அவன் எண்ணி
அத்துயர் அவள் படு அத்தனை இன்னலை
அக்கணம் போக்கிட மயிலேறி
நித்திரையில் அவன் நெஞ்சில் புகுந்தவன்
நித்தமும் ஆலயம் வர ஏகி
ஒப்பரும் காட்சியை உடனவர் காட்டிட
இப்பவன் எடுத்தனன் புதுவாழ்வு

*விகடகவி*

## நாடுமிடம் நல்லூரே

வெற்றி முனை வேலார்
வெய்யபா வம் வீட்டுவார்
பற்றும் பந்தபாசம்
பற்றா வகைசெய்வார்
நற்றாயர் பாங்கமர
நால்வேதம் தமிழ் கேட்கும்
நற்றவர்கள் நலம்விரும்பி
நாடுமிடம் நல்லூரே

*சிவ சண்முகவடிவேல்*

## எங்களுக்கோர் தீர்வு வேண்டுமையா

எத்தனை காலமாய் இப்படி வாழ்வது
எங்கடை மானத்தை எப்படி இழப்பது
அகதியாய் வாழ்ந்து அழிந்து போவதா
ஆண்ட தமிழினம் ஒழிந்து போவதா
இத்தனை துன்பமும் இங்கு வந்ததேன்
ஈழவர் வாழ்வுக்கு தீர்வுகள் இல்லையா
பித்தராய் திரிவதை நீ பார்க்க வில்லையோ
பிரியமாய் எமக்கொரு தீர்வை வழங்கிடு

*மதுரகவி*

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும் - குறள்

வலம்புரி

# அவசரகாலச்சட்டம் ஜே.வி.பியை அடக்குமா?

நாட்டின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் கதிர்காமரின் கொலையை அடுத்துப் பாராளுமன்றில் அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு சிங்கள கட்சிகள் ஆதரவு வழங்கியிருந்தன.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் விளக்கம் விசாரணைகள் இன்றி கைதுசெய்யவும், கைது செய்தவர்களை தொடர்ந்து 90 நாட்கள் தடுத்துவைக்கவும் முடியும்.

கடந்த காலங்களில் அவசரகாலச் சட்டம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டதன் காரணமாக அப்பாவித் தமிழ் இளைஞர்கள் காரண காரியமின்றிக் கைதுசெய்யப்பட்டனர். சிறைகளில் அடைக்கப்பட்டு தண்டிக்கப்பட்டமையும் கறைபடிந்த நிகழ்வுகள்.

இத்தகைய வன்மைத்தனமான சம்பவங்கள் சிங்களவர்கள் மீதான நம்பகத்தன்மையை வலுவாகக் குறைத்தது.

சிங்களவர்களோடு சேர்ந்து வாழமுடியாது. அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச் சட்டம் போன்றவையெல்லாம் தமிழர்களை நசுக்குவதற்காகச் சிங்களப் பாராளுமன்றம் கக்கும் நெருப்புக்குழம்பு என்ற எண்ண்ப்பாடு தமிழ் மக்களிடையே ஏற்பட்டது.

இதன் காரணமாகவே ஓர் சமாதானத் தீர்வைக் காணமுடியாத நிலை நீண்டுசெல்கிறது.

அதேநேரம் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு மனப்பூர்வமான தீர்வுகாணும் எண்ணம் சிங்களப் பேரினவாதிகளுக்கு அறவே இல்லை என்பது பல சந்தர்ப்பங்களில் நிரூபணமாகியுள்ளது.

இருந்தும் உலகின் அழுத்தம் காரணமாக யுத்தநிறுத்த உடன்பாட்டைச் செய்துள்ள சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்மக்களை நசுக்க முடியவில்லையே என்ற மூச்சுத் திணறலுக்கு ஆளாகி இருப்பதும் தெரிகின்றது.

பாதுகாப்புப் படையினரின் பலவீனங்களைப் பற்றி ஆராயாமல் அமைச்சர் கதிர்காமர் கொல்லப்பட்டவுடனேயே அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவது எதற்காக?

அமைச்சர் கதிர்காமரை இழந்துவிட்டோம் என்ற துயரத்திலா அல்லது கதிர்காமரின் கொலையைப் பயன்படுத்தித் தமிழ்மக்களை நசுக்குவதற்காகவா என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும்.

அவசரகாலச் சட்டம் என்பது தனித்து தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டின் அனைத்துப் பிரஜைகளையும் கட்டுப்படுத்தக் கூடியது.

அவ்வாறாயின் தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவரை ஜே.வி.பி தாக்கியபோது அவர்களைக் கைதுசெய்ய அவசரகாலச்சட்டம் மறந்தது ஏன்?

ஆர்பாட்டங்களை நடத்துவது, தமிழ்ப் பத்திரிகையாளர்களைத் தாக்குவதன் மூலமாக தமிழ் - சிங்கள மக்களிடையே கலவரத்தை ஏற்படுத்துவது போன்ற குழப்பங்களைத் தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஜே.வி.பியை அவசரகாலச் சட்டம் அடக்கத்தவறியது எதற்காக?

இந்தக் கேள்விக்கான பதில்களை சர்வதேச சமூகம் கண்டறியவேண்டும்.

# முயல்வேட்டை என்ற பெயரில் தினமும் நடக்கும் திருட்டுக்கள்

(துன்னாலை)

வடமராட்சி, கரவெட்டி, துன்னாலை ஆகிய கிராமங்களில் அவ்வூரைச் சேர்ந்த இளைஞர் குழு ஒன்று முயல் வேட்டைக்கு என்று வீட்டு உரிமையாளர்கள் இல்லாத வேளையில் வீடுகளுக்குள்ளும்,காணிகளுக்குள்ளும் புகுந்து மிருகங்களை வேட்டையாடுவதுடன் அங்குள்ள பொருட்களையும் திருடிச்செல்வதாக வட்டு உரிமையாளர்களால் புகாரிடப்படுகிறது.

குறிப்பாக வீட்டைப் பூட்டிவிட்டு அலுவலகங்களுக்கு செல்வோரின் வீடுகளை குறிவைத்து அவதானித்து வீட்டுக்குள் புகுந்து தோய்த்துப் போட்ட ஆடைகள், வெளியே காணப்படும் பொருடகள், கோழிகள் என்பவற்றை தினமும் திருடிச் செல்வதாகவும அவ்வாறான இளைஞர் குழுவின் செயற்பாட்டை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொறுப்பான அனைவரையும் பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்கள் வேண்டுகின்றனர். (து-101)

## திடீர் தேடுதல் நடவடிக்கை மாத்தளையில் 33 பேர் கைது

(மாத்தளை)

மாத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிககையொன்றின் போது 33 பேர் பொலிஸாரால் கைது செய்யபபட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் நீதி மன்றத்தில் பிடிவிறாநது பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாக இருந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. ஏனையோர் பல்வேறு குற்றச் செயல்களில் தொடர்புடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலங்களில் மாத்தளைப் பிரதேசத்தில் இடம் பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் இவர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் மாத்தளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர் என்றும் மாத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (அ-7)

## சுயதொழில் முயற்சிக்கு ஊக்கமளிக்க ஜீ.எல்.பீரிஸ் அறிவுறுத்தல்

(கொழும்பு)

அடிப்படை வசதிகள் இன்மையால் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் உரிமையை இழந்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியாலும் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் கல்வியைப் பெறும் வாய்ப்பை இழந்து உருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான மாணவர்களுக்கு தொழில் நுட்ப அறிவை பெற்றுக்கொடுக்கவும் சுய தொழில்களுக்கு ஊக்கமளிக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஹோமகமையில் மத்திய நிலையம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (து-9)

## விளையாட்டரங்குக்கு 30 மில்லியன் ரூபா

(கொழும்பு)

கோட்டே சிறி ஜயவர்த்தன புரவுக்குத் தேவையான சகல வசதிகளும் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் மேம்படுத்தப்படும் என நகர அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் குவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய வேலைத்திட்டத்தின்படி அமைச்சுக்கள் மற்றும் அரச திணைக்களங்களை கோட்டேயில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

சந்திரா சில்வா விளையாட்டரங்கினை அமைப்பதற்கான ஆரம்ப வைபவத்தில் கலந்துகொணடு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கோட்டே சிறி ஜயவர்த்தனபுர சந்திரா சில்வா விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப வைபவத்தின் நினைவுக் கல்லும் திறந்து வைக்கப்பட்டது.

இதில் கருத்துத்தெரிவித்த பிரதியமைச்சர் அனுரா ரணதுங்க, இந்த விளையாட்டரங்கை அமைப்பதற்கு நகர அபிவிருத்தி அமைச்சு 30 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார். (து-2)

## விஸ்வ வர்ணபாலவுக்கு அமைச்சர் பதவி

(கொழும்பு)

பாராளுமன்ற விவகார அமைச்சராக பேராசிரியர் விஸ்வ வர்ணபால ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது பதவியை நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இப்பதவிககு முன்னர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால பிரதி வெளிவிவகார அமைச்சராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.(ந-8)

## கதிர்காமர் கொலை
## கண்டெடுக்கப்பட்ட கிரனைட் லோஞ்சர் அரச பகுப்பாய்வாளர்களிடம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக்கொல்லபபட்ட இடத்துக்கு அருகில் இருந்து கண்டெடுக்கப்பட்ட கிரனைட் லோஞ்சர் தொடர்பில் விசாரணைகள் தொடர்ந்தும இடம்பெற்று வருகின்றன.

குறிப்பிட்ட கிரனைட் லேஞ்சர் இதற்கு முன்னர் வேறு தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா? என ஆராய்ந்து வருவதாக கொழும்பு குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது விடயமாக விரிவான முறையில் தேடுதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை குறிப்பிட்ட கிரனைட் லோஞ்சர் அரச பகுப்பாய வாளரிடம் மேலதிக ஆய்வுகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-2)

## உலக மயமாக்கல் நடவடிக்கையை தோல்வியடைய செய்து நாட்டைக் காக்க

### விக்கிரமபாகு கருணாரத்ன அழைப்பு

(கொழும்பு)

உலக மயமாக்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சக்திகளை தோல்வியடையச் செய்வதற்காக நாட்டின் வடக்கு தெற்கு என அனைத்துப் பகுதிகளிலுமுள்ள சக்திகளும் ஒன்றிணைய வேண்டும் என்று புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் நாட்டின் தேசிய வளங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனேவத்த ஹிருபிட்டிய பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்,முஸ்லிம்,சிங்கள மக்கள் அனைவரும் மனச்சாடசியுடன் ஒன்றிணைநது செயற்படுவதன் மூலம் உலகமயமாககலின தாக்கத்தை தோல்வியடையச் செய்து எமது நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் கைத்தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதோடு இந்நாட்டின் கல்வித்துறை சுகாதாரக் கல்வி என்பன தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றதா? என்பது குறித்தும் ஆராய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## ஜனாதிபதி தங்கக் கிண்ண விருது

(கொழும்பு)

நாட்டில் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கு அரச மற்றும் தனியார் துறைகளின் உதவிதேவையெனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற விளையாட்டு அரங்கில் கரப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஜனாதபதி தங்க கிண்ண விருது வழங்கும் வைபவத்தில் நேற்று முனதினம் கலந்து கொண்டு உரை ஆற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

இந்நிகழவில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதியமைசசர் டிலான் பெரேரா நாடளாவிய ரீதியில் கரப்பந்தாட்ட அபிவிருத்துக்கெனப் பல திட்டங்களை அரசாங்கம் தயாரித்துள்ளது என்று கூறினார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள 412 குழுக்கள் இந்தப போட்டியில் கலந்துகொண்டன. ரதவான கோல்டன் வேட் விளையாட்டுக் கழக வீரர்களுக்கு தங்கக் கிண்ணம் கையளிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுளளது. (து-7)

## காச நோயைக் கட்டுப்படுத்த முடியாமைக்கு முறையான சிகிச்சை பெறாமையே காரணம்

(கொழும்பு)

முறையாக சிகிச்சைகள் மேற்கொள்ளப்படாமையே காச நோயை ஒழிப்பதில ஏற்பட்டுள்ள பிரதான தடை என சுகாதார அமைச்சின் காசநோய் தடுப்புத்திட்டப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்தவருடம் இலங்கையில் பல்வேறு பகுதிகளில் இருந்து 8 ஆயிரத்து 346 காச நோயாளர்கள் இனம் காணப்பட்டதாக அந்தப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 10.6 வீதமானோர் சிகிச்சை பெறாதிருந்ததாக தகவல்களில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடமத்திய மாகாணத்தின காசநோய் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக அநுராதபுரத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவிததுள்ளார்.

காசநோயை இந்த நாட்டில் இல்லாதொழிப்பதற் காக மககளைத் தெளிவுபடுத்தும் ஒரு நடவடிக்கையாக இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது. (அ-2)



## சாயி அருளமுதம்

நாமாவளி பாடும் போது சிவன், கிருஷ்ணர், இராமர் என்ற வகையில் ஒவ்வொரு ரூபத்தையிட்டும பாட வேணடும். கவலையீனத்தினால் ஒரு உருவத்தின் பெயரைக் கொண்ட நாமாவளிகளை மட்டுமே நங்கள் பாடிக்கொண்டிருந்தால் வேறு உருவங்களை விரும்பி வணங்குபவர்கள் தாம் புறக்கணிக்கப்பட்டு விட்டதாக எண்னுவார்கள். பஜனை செய்யப்படும் சூழல், போட்டியினால் ஏற்படும் தற்பெருமை, தீவிர மதாபிமானம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டிருததல் வேண்டும். இதுவே உங்களுக்கு நான் கூறும் அறிவுரையாகும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# தமிழீழ ஆட்பதிவு திணைக்களத்தினால் தமிழீழ தேசிய அடையாள அட்டை அறிமுகம்

(கிளிநொச்சி)

தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் சிந்தனைக்கு அமைய தமிழீழ ஆட்பதி திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்பணியாக தமிழீழ தேசிய அடையாள அட்டையினை தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழ்விடமாகக் கொண்ட மக்களிற்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக தமிழீழ ஆட்பதிவுத்திணைக்கள அடையாள அட்டைப் பகுதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

பதினாறு வயதைப்பூர்த்தி செய்த அனைத்து மக்களும் தமிழீழ தேசிய அடையாள அட்டையினை பெற்றுக்கொள்ளவேண்டும். தமிழீழ தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வது தொடர்பாக அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு பின்னர் பத்திரிகைவாயிலாகவும், அருகிலுள்ள போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு, பிரதேச செயலகங்களிலும், மனிதவள அலுவலகங்களிலும், கிராம அலுவலகர்களிடமும் பெற்றுக்கொள்ளலாமென தமிழீழ ஆட்பதிவுத்திணைக்கள தேசிய அடையாள அட்டை பகுதிப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ச-4)

# சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிரான தேசியமைப்பு இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. குறித்த அமைப்பின் பிரதிநிதிகள் பலர் இதில் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த அமைப்பின் பிரதிநிதிகள் அத்திட்டத்திற்கு எதிராக உரையாற்றினர். பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் இந்திய தூதரகத்திற்குச் சென்று இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நிருபமா ராவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். (ச-8)

## நான்கு...

லாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

அதேவேளை மேஜர்ஜெனரல் பி.சந்திர வன்ஸ நேற்றுமுன்தினம் முதல் கொழும்புப் பிரிவின் இராணுவ நடவடிக்கைக்கான தளபதியாகப் பதவியேற்றுள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்தது. (ச-4)

## ஒக்டோபர்...

தற்சமயம் 800 ரூபாவை மின்சாரக் கட்டணமாகச் செலுத்தும், அதிகளவு மின்சாரத்தைப் பாவிக்கும் நிறுவனங்கள் புதிய கட்டணத்தின்படி 3 ஆயிரம் ரூபாவினை செலுத்தவேண்டிய நிலை ஏற்படும்.

வீடுகளுக்கான நிலையான கட்டணமான 30 ரூபா இனி 60 ரூபாவாக உயரும் என அறிவிக் கப்பட்டுள்ளது. (ச-4)

## செய்தியாளருக்கு...

கொழும்புக் கோட்டை நீதி மன்ற நீதிபதி சரத் கருணாரட்ண முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட யதுர்சனை பிணையில் விடுவிப்பதற்கு தமக்கு ஆட்சேபனை இல்லையென பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

அத்தோடு கோட்டை புகையிரதநிலையத்திற்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது யதுர்சனின் மீது தாக்குதல் மேற்கொண்டவர்களிடம் இருந்து அவரைக் காப்பாற்றுவதற்காகவே தாங்கள் அவரைக் கைதுசெய்த தாகவும் நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்தனர். இவற்றை செவிமடுத்த நீதிபதி யதுர்சனை பிணையில் விடுதலை செய்ததோடு, அவர் மீது தாக்குதல் நடத்தியவர்களை கைதுசெய்யும்படியும் உத்தரவிட்டுள்ளார். இவ்வழக்கின் விசாரணைகள் அடுத்த மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ச-8)

## இராணுவத்தினருக்கு...

ளைத் தேடும் பணியில் ஈடுபட்டனர். நேற்றுக் காலையும் வழமைபோல் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடமுயன்ற சமயம், இராணுவத்தினர் அவர்களைத் தடுத்ததுடன் காணாமல் போன இருவரையும் தாம் கைது செய்து திருகோணமலையில் தடுத்து வைத்திருப்பதாகக் கூறியதுடன், நேற்றுக்காலை 11 மணிக்கு தமது முகாமிற்கு வந்தால் அவர்களைத் தாம் விடுதலை செய்வதாகவும் கூறியுள்ளனர்.

இதனையடுத்து குறிப்பிட்ட நேரத்திற்கு சக மீனவர்கள் சென்ற போது மீண்டும் தவணை வழங்கி மாலை 4 மணிக்கு வருமாறு பணித்துள்ளனர். இராணுவத்தினரின் ஏமாற்று வேலையை அடுத்து அப்பகுதி மக்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மணற்காட்டு இராணுவ முகாமிற்கு செல்லும் பாதையில் தடையேற்படுத்தி இராணுவப் போக்குவரத்தை முடக்கியுள்ளனர். வீதிகள் தோறும் ரயர்கள் போட்டு எரித்தனர். இராணுவத்தினருக்கு எதிராக மக்கள் போராட்டம் எல்லை மீறிச் சென்றவேளை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று போராட்டத்தைக் கட்டுப்படுத்தியதுடன், மீனவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வதாகவும் உறுதியளித்துள்ளனர். நேற்றைய சம்பவத்தையடுத்து அப்பகுதி எங்கும் பதற்றமான சூழ் நிலை காணப்படுகின்றது. (ச-35)

## விடுதலைப்புலிகளின்...

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் நடைமுறைகளை மீளாய்வு செய்து இரு பகுதியினரும் முறையாக கடைப்பிடிப்பதற்கு ஏதுவான வழிமுறைகளை ஆராய்வதற்கு அரசுடன் நேரடிப்பேச்சில் ஈடுபடுமாறு நோர்வே விடுத்த அழைப்பிற்கு விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் கடந்த வெள்ளிக்கிழமை இணக்கம் தெரிவித்திருந்தது.

அது தொடர்பான அறிவித்தலும் நோர்வேத்தரப்பினூடாக அரசிற்கு விடுக்கப்பட் டது. அதில் இருதரப்பினருக்குமிடையிலான நேரடிப்பேச்சுக்களை நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடாத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

அதை ஏற்றுக்கொள்ளாத அரசு விடுதலைப்புலிகளுடனான நேரடிப்பேச்சுக்கள் உள்நாட்டிலேயே நடைபெறவேண்டுமெனவும் பேச்சுக்கான இடமாக வெளிநாடுகளைத் தெரிவுசெய்வதன் மூலம் விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகார கோரிக்கையை பிரசாரப்படுத்த இடம் ஏற்படுத்திக்கொடுப்பதாக அமைந்து விடுமெனவும் அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக உள்நாட்டில் பேச்சுநடத்தாமல் வெளிநாட்டில் நடத்தவேண்டுமென்பதற்கு விடுதலைப்புலிகள் தகுந்த விளக்கங்களை முன்வைக்க வேண்டும். அதுவரையும் அவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கப்போவதில்லை இதுகுறித்து நோர்வே ஊடாக விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்க ஏற்பாடு செய்துள்ள தாக அரச தரப்புப் பேச்சாளர் ஒருவர் தெரி வித்துள்ளார். (ச-4)

# மதுபான விற்பனை அனுமதி நிறுத்தம் - நிதியமைச்சர்

(கொழும்பு)

மது வரிச்சட்டத்தின் கீழ் அனுமதிபெற்று மதுபான விற்பனை நிலையங்களை நடத்தி வருவோர் குறித்த இடத்தில் இருந்து வேறொரு இடத்திற்கு விற்பனை நிலையங்களை மாற்றம் செய்தால் , அதற்காக வரிஅறவிட நடவடிக்கையெடுக்கப்படுமென நிதியமைச்சர் கலாநிதி சரத்அமுனுகம நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தமது வரிச்சட்டத்திற்கு புறம்பாக மதுபான நிலையங்களை திறப்பதற்கு எவருக்கும் அனுமதி வழங்கவில்லை எனக்கூறிய நிதியமைச்சர் அமுனுகம ஜனாதிபதியின் உத்தரவிற்கமைய மதுபான விற்பனை அனுமதிப்பத்திரம் வழங்குவது முற்றாக நிறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜாதிகஹெல உறுமய கட்சியின் உறுப்பினர் வணக்கத்திற்குரிய உடவத்த நந்ததேரர் கேட்ட வாய்மூலக்கேள்வியொன்றிற்கு பதிலளிக்கும் வகையிலேயே நிதியமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். (து-2)

## மக்கள் எழுச்சி...

பிரசார வாகனங்கள் ஊடாகச்சென்று சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்கள் அடங்கிய மனுவை நேற்று தேர்தல் ஆணைய்யாளரிடம் கையளிக்கப்பட்டதாக கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கடந்த 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந் நடவடிக்கைகளில் 10இலட்சம் கையெழுத்துக்கள் பெறத்திட்டமிட்டிருந்தபோது மக்கள் 20 இலட்சம் கையெழுத்துக்களை இட்டுள்ளார்கள்.

மக்களின் இவ்வெளிச்சிக்கிணங்க தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதிக்கான தேர்தலை இவ்வருடத்தில் நடாத்துவார்-நடத்தவேண்டும் என திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார். (ச-4)

## காத்தான்குடியில்...

சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன அப்படி எந்த ஆயுதக்குழுவும் தமது பிரதேசத்தில் இல்லை எனவும் இதுதொடர்பாக வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய கதவடைப்புக் காரணமாக அப்பிரதேசத்தில் கடைகள் சந்தைகள் அரசாங்க அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன. (ச-4)

# தெய்வீக இசையரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடாத்தப்படும் தெய்வீக இசையரங்கில் 16 நாள் நிகழ்வாக இன்று இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இக்கச்சேரியில் பாட்டு குணபூசணம் நாகராஜா , வயலின் எ.ஜெயராமன் , மிருதங்கம் எஸ்.துரைராசா ,முகர்சிங் கே.நந்தகுமார் ஆகியோர் வாசிக்கவுள்ளனர். (அ-19)

# சான்றிதழ் வழங்கல்

(தென்மராட்சி)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பரீட்சைக்குத்தோற்றிய 2 ம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான சான்றிதழ் எதிர்வரும் 1ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

அனைத்து ஆசிரிய மாணவர்களும் தமது மூல பிரதிச்சான்றிதழை நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கலாசாலை அதிபர் ஆ.சிறீஸ்கந்தமூர்த்தி அறிவித்துள்ளார். (கு)


**திருமணக்கார் (குளிரூட்டியது) வாடகைக்கு**

☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
☆ விசேட வைபவங்கள் ☆ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.



தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
T.P: 0777-903090, 077-3086939, 0777-246117, 077-6018467
(c-9843)

**பதவி வெற்றிடம்**

➔ கணனிப் பக்க அமைப்பாளர்கள்
(பயிலுநர் -இருபாலாரும் - ஆண்கள் இரவுக்கடமை)
➔ அலுவலகச் செய்தியாளர்கள், கட்டுரையாளர்கள்
(பயிலுநர் -இருபாலாரும்)
➔ விற்பனை முகாமையாளர்
(ஆண்கள்)

கல்வித் தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி

➔ இயந்திர இயக்குநர்கள்
(ஆண்கள் - பயிலுநர் - இரவுக்கடமை)

குறிப்பு:
யாழ். நகர மையத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.
சுய விபரங்கள் அடங்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் நிர்வாக உத்தியோகத்தர் வலம்புரி, இல.3 இரண்டாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்

**தேவை**
விற்பனையாளர்கள்- பெண்கள்
உணவு பரிமாறுபவர்கள்- ஆண்கள்
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
நேரில் வரவும்
Mango's (மாங்கோஸ்)
359/3 கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
T.P: 021 222 8294, 0777684131

**நாதன்ஸ் சினிமா**
குளிரூட்டப்பட்டது | யாழ்ப்பாணம்
சத்யராஜ், நமீதா நடித்த
இங்கிலீஷ்காரன்
(வடிவேலின் கலக்கல் நகைச் சுவையுடன்)
காலம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

**மனோகரா** | யாழ்.
விக்ரம், சதா மற்றும் பலர் நடிப்பில்,
அந்நியன்
கா.நே: 10.30, 02.30, 6.30, 9.30

**நாதன்ஸ் சினிமா**
குளிரூட்டப்பட்டது | யாழ்ப்பாணம்
அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேலு சேர்ந்து கலக்கும்
கா.நே 10.30, 02.30, 06.30, 09.30





இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.